விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே



# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 086 வள்ளுவர் ஆண்டு 2056 பங்குனி 01 சனிக்கிழமை (15.03.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## பட்டலந்த விவகாரம்
## விசேட அறிக்கை வெளியிடவுள்ளார் ரணில்

(கொழும்பு)
பட்டலந்த ஆணைக்குழு அறிக்கை தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் விசேட அறிக்கை ஒன்று வெளியிடப் படவுள்ளது.

15ஆம் பக்கம் பார்க்க

## திருகோணமலை மூதூரில்
# இரு தமிழ்ப் பெண்கள் வெட்டிப் படுகொலை
## 15 வயதுச் சிறுமி கைது

(திருகோணமலை)
திருகோணமலை மூதூர் பகுதியில் இரு தமிழ்ப் பெண்கள் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.
கொலை செய்த குற்றச்சாட்டில் 15 வயதுச் சிறுமியொருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

(15ஆம் பக்கம் பார்க்க)

## முல்லை - பரந்தன் வீதியில் மோ.சைக்கிள் விபத்து
### யாழ்.இளைஞன் உயிரிழப்பு



(முல்லைத்தீவு)
முல்லைத்தீவு - பரந்தன் வீதியில் இடம் பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் யாழ்ப் பாணத்தைச் சேர்ந்த இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

15ஆம் பக்கம் பார்க்க

# பட்டலந்த வதை முகாம் அறிக்கை
## பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பு

(கொழும்பு)
பட்டலந்த வதை முகாம் அறிக்கை பாராளுமன்றத்தில் நேற்று சமர்ப்பிக்கப்பட்டது.
சபை முதல்வரும் அமைச்சருமான பிமல் ரத்நாயக்கவினால் இவ் அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

(02ஆம் பக்கம் பார்க்க)

## 16 கிலோ கஞ்சாவுடன்
### சங்கத்தானையில் இருவர் கைது

(சாவகச்சேரி)
சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சங்கத்தானை

15ஆம் பக்கம் பார்க்க

## காலியில் துப்பாக்கிச் சூடு ஒருவர் பலி

(காலி)
காலி, அம்பலாங்கொடையில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழந் துள்ளார்.

15ஆம் பக்கம் பார்க்க

## படுகொலைக் கலாசாரத்தை நிறுத்த ஆதரவளிக்கத் தயார்
### அநுர அரசிடம் எதிர்க்கட்சித் தலைவர் சஜித்



(கொழும்பு)
நாட்டில் இடம்பெற்றுவரும் மிலேச்சத்தனமான மனித படுகொலைக் கலாசாரத்தை நிறுத்து

02ஆம் பக்கம் பார்க்க

## பட்டலந்த அறிக்கை ஒரு வாழும் சாட்சி
### சபையில் பிமல் ரத்நாயக்க உணர்வுபூர்வ உரை



(கொழும்பு)
பட்டலந்த அறிக்கை

15ஆம் பக்கம் பார்க்க

## மட்டக்களப்பில் விபத்து; கொக்குவில் இளைஞன் பலி



(மட்டக்களப்பு)
மட்டக்களப்பில் நேற்றுக் காலை இடம் பெற்ற வீதி விபத்தில் யாழ்ப்பாணம் கொக்குவிலைச் சேர்ந்த இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

15ஆம் பக்கம் பார்க்க

## கண்கலங்கினார் சபாநாயகர்

(கொழும்பு)
பட்டலந்த ஆணைக்குழுவின் அறிக்கையைச் சபை முதல்வர் பிமல் ரத்நாயக்க நேற்று சமர்ப்பித்து உரையாற்

02ஆம் பக்கம் பார்க்க

## பாடசாலையில் மயங்கி விழுந்த ஆசிரியை உயிரிழப்பு
### கொக்குவில் இராமகிருஷ்ணாவில் துயரம்



(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் கொக்குவில் இராமகிருஷ்ணா வித்தியாசாலையில் கற்பிக்கும் ஆசிரியை ஒருவர் திடீரென மயங்கிவிழுந்து

02ஆம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலையில்...

உயிரிழந்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற இச்சம்பவத்தில் நாரந்தனையைப் பிறப்பிடமாகவும் தாவடியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி பிரியதர்சினி கனகரத்தினம் (வயது-53) என்பவரே உயிரிழந்தவராவார்.

பாடசாலையில் மாணவர்களின் பெற்றோர்களுடனான சந்திப்பு நடந்து கொண்டிருந்தபோது, அங்கிருந்த ஆசிரியை திடீரென மயக்கமுற்று விழுந்துள்ளார்.

உடனடியாக அவர் யாழ்.போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

எனினும் சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்துள்ளார்.

மாரடைப்புக் காரணமாக மரணம் சம்பவித்துள்ளதாக மருத்துவ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## பட்டலந்த வதை...

பட்டலந்த வதைமுகாம் அறிக்கை 25 வருடங்களாக இருட்டறையில் இருந்ததாக சபை முதல்வர், அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்திற்கு குறித்த அறிக்கையை நேற்று வெள்ளிக்கிழமை சமர்ப்பித்த போதே இதனைத் தெரிவித்தார்.

அறிக்கையை சமர்ப்பித்து தொடர்ந்து உரையாற்றுகையில்,

1976 ஆம் ஆண்டில் பெருமளவிலான பலத்தைக் கொண்டிருந்த ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கம் மக்களுடைய அபிப்பிராயம் இல்லாமல் ஒரு நிறைவேற்று ஜனாதிபதியை நியமித்தது.

ஜனநாயக ரீதியான தொழிற்சங்கங்களைச் சேர்ந்தவர்கள், மாணவர் சங்கங்களைச் சேர்ந்தவர்கள், இலக்கியவாதிகள், சங்கத் தலைவர்கள், தொழிற்சங்கவாதிகள் போன்றவர்களைத் தடுத்து வைத்து மக்களுக்கு எதிராக மனிதக் கொலைகளை நடத்தினார்கள்.


இந்தச் சித்திரவதைக் கூடத்தில் அப்போதைய அரசாங்கத்தின் தலையீடுகளினால் ஆயிரக்கணக்கானவர்கள் கொல்லப்பட்டார்கள்.

சித்திரவதைகள் தொடர்பாக சர்வதேச ரீதியாகவும், தேசிய ரீதியாகவும் கண்டனங்கள் வெளியிடப்பட்டன. அரசாங்க மாற்றங்கள் காரணமாக இந்த சாபத்திற்கு எதிராக தற்போது மீண்டும் ஜனநாயகம் கட்டி எழுப்பப்பட்டிருக்கிறது.

பட்டலந்த போன்ற வதை முகாம்கள் தொடர்பாக அப்போதைய தலைவர்கள் அந்த இடத்திற்குச் சென்று வெளிப்படுத்திய போது மக்கள் நீதிநியாயங்கள் நிறைவேற்றப்படும் என்றும் தங்களுடைய உறவுகளுக்கு என்ன நடந்தது என்றும் அறிய ஆவலோடு எதிர்பார்த்தார்கள். அந்தக் கொடூரமான நிலைக்கு அரசியல் பூச்சு பூசுவதற்கு முயற்சித்தார்கள்.

பொது மக்களுக்கு எதிராக குற்றங்களைச் செய்தவர்கள் அனைவரும் சேர்ந்து இருந்தார்கள், சட்டத்திலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காக அனைத்து விடயங்களையும் செய்திருந்தார்கள்.

இந்த அறிக்கை இருட்டறையில் ஒழித்து வைக்கப்பட்டிருந்தது. 25 வருடங்களுக்கு பின்னர் வெளியே வந்திருக்கிறது. பட்டலந்த சித்திரவதைமுகாம் சம்பந்தமான விடயங்கள் இந்த அறிக்கையில் இருக்கின்றன எனத் தெரிவித்தார். (ம-7)



கச்சதீவு அந்தோனியார் ஆலய திருவிழா நேற்று மாலை ஆரம்பமாகிய நிலையில் விசேட பிரார்த்தனைகள் நேற்று இரவு இடம் பெற்றது.

## படுகொலை...

வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்காக நாங்கள் பூரண ஆதரவை வழங்கத் தயாராக இருக்கிறோமென எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.


நாட்டில் சட்டம் ஒழுங்கை சீர்குலைக்கும் வகையில் இடம்பெற்று வரும் கொலைச் சம்பவங்கள் தொடர்பில் நேற்று வெள்ளிக்கிழமை பாராளுமன்றத்தில் விசேட கூற்றொன்றை முன்வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். (ம-7)

## கண்...

றிய போது சபாநாயகர் ஜகத் விக்கிரமத் கண் கலங்கினார்.

பட்டலந்த வதை முகாம் அறிக்கையை பிமல் ரத்நாயக்க வாசித்து முடித்த போது சபாநாயகரின் கண்கள் கலங்கியவாறு காணப்பட்டது. (ம-7)


# மணிவிழா வாழ்த்துகள்



திரு. மாணிக்கம் ராம்குமார்

Bsc, P.G.D.E, SLTS -1

Best Wishes!

சேவை விபரம்:

- யா/ யாழ்ரன் கல்லூரி, காரைநகர் (06.07.1998 - 03.04.2000 வரை)
- யா/கொக்குவில் இந்துக் கல்லூரி (04.04.2000 - 07.10.2012 வரை)
- யா/கோண்டாவில் இந்துக் கல்லூரி (10.10.2012 - 13.03.2025 வரை)

எமது கல்லூரியில் ஆசிரியராக மற்றும் பகுதித் தலைவராக சேவையாற்றி ஓய்வு பெற்றுச் செல்லும் மணிவிழா நாயகனை சீரும் சிறப்பும் பெற்று வாழ பாடசாலைச் சமூகம் வாழ்த்தி நிற்கின்றது.

(3663)

நலன்புரிக்கழகம்
யா/ கோண்டாவில் இந்துக் கல்லூரி


## கர்த்தருக்குள் நித்திரை அடைந்து விட்டார்

மலர்வு 07 - 12 - 1996



உதிர்வு 14 - 03 - 2025

## சகோதரன் ஜீவரட்சகன் மதுசிகன்

கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சகோதரன் ஜீவரட்சகன் மதுசிகன் அவர்கள் நேற்று 2025.03.14 வெள்ளிக்கிழமை கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஜீவரட்சகன் மற்றும் ஜோஜ் தர்ஷினி தம்பதியரின் அன்புப் புதல்வரும் சுதர்சிகா(Emma- save a life NGO), ஜெருசிகன்(Jaffna Royal Cashews Cashier), கனிசிகன்(மாணவன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (16.03.2025) ஞாயிற்றுக்கிழமை பி.ப 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் (3rd mile post k.k.s Road கொக்குவில், யாழ்ப்பாணம்) நடைபெறவுள்ளது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
தாயார்
077 ...

(3661)


## வேலையாட்கள் தேவை

- விவசாயத்துறை சார்ந்து கல்வி பயிலும் மாணவர்களுக்கான பகுதி நேர வேலைவாய்ப்பு
- தோட்ட வேலை பற்றிய முன் அனுபவம் உடையவராக இருத்தல் வேண்டும்.
- பூங்கன்றுகளை பராமரித்தல், விற்பனை செய்யக் கூடியவராக இருத்தல் வேண்டும்.

தொடர்புகளுக்கு :
077 729 2840

(C-2464)

## கல்வி நிலையத்திற்கு கட்டடம் தேவை

யாழ். நகரில் இயங்கும் தனியார் கல்வி நிலையம் ஒன்றினது கணினி ஆய்வுகூடத்தினை அமைப்பதற்கு யாழ். நகரின் பிறவுண் வீதி அல்லது அதனை அண்மித்த பகுதிகளில் வணிகக் கட்டடம் அல்லது வீடு ஒன்று வாடகைக்குத் தேவை.

தொடர்புகளுக்கு :
077 378 4053

(3660)

## கல்வி நிலையத்திற்கு பணியாளர் தேவை

யாழ். நகரில் இயங்கும் தனியார் கல்வி நிலையம் ஒன்றில் பகுதி நேரமாகப் பணியாற்றுவதற்கு இரண்டு பெண் பணியாளர்கள் தேவை. யாழ். மாநகரசபை எல்லைக்குள் வசித்தல் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு :
077 378 4053

(3660)

## புதுக்கடை திறப்பு விழா

35 வருட காலப் பூர்த்தியை முன்னிட்டு கோழிகள்/ முட்டைகள் மலிவு விலையில்

வாடிக்கையாளர்களின் நலன்கருதி உரும்பிராய் கிழக்கு, கோப்பாய் வீதியில் இன்று (15.03.2025) முதல் எமது 8 ஆவது கிளையைத் திறந்துள்ளோம்.

எமது விற்பனை நிலையத்தில் இன்று புரொயிலர் இறைச்சி - 980/=, பேரன்ஸ் இறைச்சி - 1200/=, கல்பேட் இறைச்சி - 1100/=, முட்டை - 29/= விற்பனை செய்யப்படும்.

(3665)

நியூட்டன் சிற்றி கோழிக்கடை
உரும்பிராய் கிழக்கு, கோப்பாய் பிரதான வீதி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதாரத்தில் ஸ்திரமடைய

# கைத்தொழில்கள் ஊக்குவிக்கப்பட வேண்டும்

## ஜனாதிபதி அதிகாரிகளுக்கு பணிப்பு

**(கொழும்பு)**

**தேசிய பொருளாதாரத்தை முன்னேற்றுவதற்காக உற்பத்திக் கைத்தொழில்களை பயனுள்ளதாக முன்னெடுத்தல் அவசியமென ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.**

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவிற்கும் கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சின் அதிகாரிகளுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

தேசிய பொருளாதாரத்தை முன்னேற்றுவதற்காக உற்பத்திக் கைத்தொழில்களை பயனுள்ளதாக முன்னெடுத்தல், ஒருங்கிணைத்தல், அபிவிருத்தி மற்றும் அதனுடன் தொடர்புடைய சவால்கள் குறித்து இதன்போது ஆராயப்பட்டது.

சிறு மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்களை ஊக்குவிப்பதற்காக அரசாங்கத்தின் ஆரம்ப முதலீடுகள் மேற்கொள்ளல் மற்றும் அவற்றின் முறையான கண்காணிப்பு, முதலீட்டு சபைகளை அண்டிய உள்ளூர் சிறு அளவிலான கைத்தொழில்களை உருவாக்குதல் மற்றும் சிறு மற்றும் மத்திய தொழில் முயற்சியாளர்கள் எதிர்கொள்ளும் வணிகக் கடன்கள் தொடர்பான பிரச்சினைகள் குறித்தும் பரவலாக ஆராயப்பட்டது.

கைத்தொழில் அமைச்சுக்கு ஒதுக்கப்பட்ட ஆனால் இது வரை விடுவிக்கப்படாத காணிகளை உடனடியாக விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறும் ஜனாதிபதி அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி, பிரதி அமைச்சர் சதுரங்க அபேசிங்க, ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க, கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் திலகா ஜயசுந்தர, கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சின் அதிகாரிகள் ஆகியோர் இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொண்டனர்.(6-8)



## வர்த்தக நிலையங்களில் தீப்பரவல்

(கொழும்பு)

நோர்டன் பிரிட்ஜ் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஹகராபிட்டிய ஜம்புதென்ன பகுதியில் உள்ள மூன்று வர்த்தக நிலையங்களில் தீப்பரவல் ஏற்பட்டுள்ளது.

நேற்று அதிகாலை 1.30 மணியளவில் இத்தீப்பரவல் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இச்சம்பவத்தில் மொத்த மற்றும் சில்லறை உணவு பொருட்கள் விற்பனை நிலையங்கள் மூன்று தீக்கிரையாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தீப்பரவல் ஏற்பட்ட மூன்று வர்த்தக நிலையங்களும் ஒரே உரிமையாளருக்கு சொந்தமானது எனவும், இதன்போது வர்த்தக நிலையத்தில் யாரும் இருக்கவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

பிரதேச மக்கள் இணைந்து தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளதுடன் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை நோர்டன் பிரிட்ஜ் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (6-8)

## அரச வேலை பெற்று தருவதாக கூறி கையூட்டு

### இருவர் கைது

(கொழும்பு)

அரசாங்க வேலை வாய்ப்பு பெற்று தருவதாகக் கூறி நால்வரிடமிருந்து ஐந்தாயிரம் ரூபாய் கையூட்டல் பெற்ற ஒரு பெண் உட்பட இருவரை கையூட்டல் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு கைது செய்துள்ளது.

குட்டிகல - பதலங்கல பகுதியில் வைத்து சந்தேகநபர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கைது செய்யப்பட்ட நபர்கள் எம்பிலிப்பிட்டிய நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட பின்னர் அவர்களில் ஒருவரை எதிர்வரும் 19 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதவான் உத்தரவிட்டுள்ளார். மற்றைய சந்தேக நபரை தலா ஐந்து லட்சம் ரூபாய் பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளில் விடுவிக்க உத்தரவிடப்பட்டுள்ளது. (6-8)

## சட்டவிரோத மதுபான போத்தல்களுடன் ஒருவர் கைது

(கொழும்பு)

சட்டவிரோதமான முறையில் வெளிநாட்டிலிருந்து இலங்கைக்கு கொண்டு வரப்பட்ட 42 வெளிநாட்டு மதுபான போத்தல்களுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

42 வெளிநாட்டு மதுபான போத்தல்கள் மற்றும் 25 கிலோ ஏலக்காய்களுடன் வெளிநாட்டிலிருந்து வந்த நபரே கைது செய்யப்பட்டுள்ளார்.

கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையிலேயே இந்த கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் கிராண்ட்பாஸ் பகுதியைச் சேர்ந்த 29 வயதுடையவர் எனத் தெரியவந்துள்ளது.

மேலதிக விசாரணைகளை விமான நிலைய பொலிஸ் அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர். (6-8)

## நாமல் ராஜபக்ஷவை ஜனாதிபதியாக்குவதற்கு

### மொட்டுக் கட்சி திட்டம்



(கொழும்பு)

நாமல் ராஜபக்சவை அடுத்த ஜனாதிபதியாக்குவதற்கு அனைத்து ஏற்பாடும் செயற்படுத்தப்படும் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜனக திஸ்ஸகுட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா பொதுஜன பெரமுன தலைமையகத்தில் நேற்று முன்தினம் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே ஜனக திஸ்ஸகுட்டியாராச்சி இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்த நாட்டின் அடுத்த தலைவர் நிச்சயமாக நாமல் ராஜபக்ச தான் என்று நாங்கள் நம்புகிறோம். நாங்களும் அப்போதே அப்படித்தான் சொன்னோம்.

இன்றைய திகதிக்குள், இந்த நாட்டு மக்கள் தற்போதைய ஜனாதிபதியின் செயற்பாடுகளையும் தற்போதைய அரசாங்கத்தின் அனைத்து செயற்பாடுகளையும் புரிந்து கொள்கிறார்கள்.

எனவே, இந்த நாட்டிற்காக உழைத்த தலைவர் மகிந்த ராஜபக்ச ஆவார். இந்த நாட்டில் நிலவிய போரை முடிவுக்கு கொண்டு வந்த தலைவரும் அவரே.

இந்த உள்ளூராட்சி தேர்தலின் பின் நாமல் ராஜபக்சவை ஜனாதிபதியாக்குவதற்கான எங்கள் திட்டம் உருவாகும்.

அதற்குத் தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் நாங்கள் ஆரம்பமட்டத்திலிருந்து தயார் செய்து வருகிறோம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (6-8)

## யாழ்.பல்கலையில்

## 39ஆவது பொதுப்பட்டமளிப்பு

### எதிர்வரும் 19, 20, 21, 22 ஆம் திகதிகளில்




(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் 39 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழா எதிர்வரும் 19,20,21 மற்றும் 22 ஆம் திகதிகளில் யாழ். பல்கலைக் கழக உள்ளக விளையாட்டரங்கில் இடம்பெறவுள்ளது.

குறித்த நான்கு நாட்களும் காலை 9 மணி, மு.ப 11.30 மணி, பி.ப 2.30 மணி ஆகிய நேரங்களில் பட்டமளிப் புவிழா இடம் பெறுமெனவும் இறுதி நாளான நான்காம் நாளில் மாலை 5 மணிக்கு பட்டமளிப்பு நடைபெறுமெனவும் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக நிர்வாகம் அறிவித்துள்ளது. (6-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




‘திரும்பி வந்துட்டன்னு சொல்லு’

# ஊன்று கோலுடன் களத்துக்கு வந்த டிராவிட்




ஐபிஎல் 18 ஆவது சீசன் மார்ச் 22 ஆம் திகதி கொல்கத்தா VS பெங்களூரு ஆட்டத்துடன் கோலாகலமாக தொடங்கவிருக்கிறது. இதனை முன்னிட்டு அனைத்து ஐ.பி.எல் அணிகளும் தீவிர பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றன.

சம்பியன்ஸ் ட்ராபியில் விளையாடிய வீரர்கள் வரிசையாக தங்களின் ஐ.பி.எல் அணிகளுடன் இணைந்து வருகின்றனர்.

இந்த நிலையில், ராஜஸ்தான் ராயல்ஸ் அணியின் தலைமைப் பயிற்சியாளர் ராகுல் டிராவிட் ஊன்றுகோல் சாதன உதவியுடன் தனது அணி வீரர்களுக்கு பயிற்சியளிக்க களத்துக்கு வரும் வீடியோ சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகிறது.

கடந்த மாத இறுதியில் நகூர் மெமோரியல் ஷீல்ட் எனும் கர்நாடக உள்ளூர் கிரிக்கெட் தொடரில் டிராவிட் தனது மகன் அன்வேயுடன் விஜயா கிரிக்கெட் கிளப் சார்பில் களமிறங்கினார்.

இதில், அரையிறுதியில் ராகுல் டிராவிட் தனது மகனுடன் சேர்ந்து 66 பந்துகளில் 43 ரன்கள் பார்ட்னர்ஷிப்பில் ஆடிக்கொண்டிருந்தபோது காலில் காயம் காரணமாக பாதியில் வெளியேறினார்.

இதனால், ராஜஸ்தான் அணி கேம்ப்பில் ராகுல் டிராவிட் இணைவாரா என்று சந்தேகம் எழுந்தது. இத்தகைய சூழலில்தான், ராஜஸ்தான் அணி நிர்வாகம் நேற்று முன்தினம் பிற்பகல் 2 மணியளவில் எக்ஸ் தளத்தில், காயமடைந்த தலைமை பயிற்சியாளர் டிராவிட், குணமடைந்து வருகிறார். இன்று ஜெய்ப்பூரில் எங்களுடன் இணைவார் என்று பதிவிட்டது. அதன்படி, நேற்று முன்தினம் மாலை ராஜஸ்தான் ராயல்ஸ் அணியுடன் டிராவிட் இணைந்தார்.

அத்தோடு, ஊன்றுகோல் உதவியுடன் டிராவிட் களத்துக்கு வரும் வீடியோவையும் அணி நிர்வாகம் எக்ஸ் தளத்தில் பதிவிட்டது. இந்த வீடியோ தற்போது சமூக வலைத்தளங்களில் வைரலாகி வரும் நிலையில், இணையத்தளவாசிகள் பலரும் டிராவிட்டின் அர்ப்பணிப்பை பாராட்டி வருகின்றனர்.

ராஜஸ்தான் அணி தனது முதல் போட்டியில் ஐதராபாத் அணியை எதிர்வரும் மார்ச் 23 ஆம் திகதி எதிர்கொள்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. (6-8)

# புதிய கப்டனாக அக்ஷர் நியமனம்

## டில்லி அணி நிர்வாகம் அறிவிப்பு



டில்லி அணியில் கப்டனாக அக்ஷர் பட்டேலை அணி நிர்வாகம் அதிகாரபூர்வமாக நேற்று அறிவித்தது.

டில்லி கப்பிடல்ஸ் அணியில் கே.எல்.ராகுல், அக்ஷர் படேல், தென் ஆபிரிக்காவைச் சேர்ந்த டுபெலிசிஸ் ஆகிய 3 பேரின் பெயர்கள் கப்டனுக்கான தேர்வில் இருந்தது.

இதில் கே.எல்.ராகுலை நியமிக்க டில்லி அணி நிர்வாகம் விரும்பியது. ஆனால் அவர் அதை நிராகரித்தார்.

இந்நிலையில் அக்ஷர் படேலை டில்லி அணியின் கப்டனாக அணியின் நிர்வாகம் அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது.

அக்ஷர் படேல் 2019 ஆம் ஆண்டில் இருந்து டில்லி கப்பிடல்ஸ் அணியில் விளையாடி வருகிறார். அவர் ரூ.18 கோடிக்கு தக்க வைக்கப்பட்டுள்ளார்.

அக்ஷர் படேல் ஐ.பி.எல் இல் 150 ஆட்டத்தில் விளையாடி 1653 ரன்கள் எடுத்துள்ளார். 123 விக்கெட் வீழ்த்தி உள்ளார்.

கடந்த சீசனில் டில்லி அணிக்கு ரிஷப் பண்ட் கப்டனாக செயற்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (6-8)

# இறுதிப்போட்டிக்கு முன்னேறிய இந்திய மாஸ்டர்ஸ் அணி



ராய்ப்பூரில் நேற்று முன்தினம் நடைபெற்ற 2025 சர்வதேச மாஸ்டர்ஸ் லீக் அரையிறுதிப் போட்டியில் இந்தியா மாஸ்டர்ஸ் அணி. அவுஸ்திரேலியா மாஸ்டர்ஸ் அணியை 94 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தியது.

ஷாபாஸ் நதீம் தலைமையிலான ஆதிக்கம் செலுத்தும் பந்துவீச்சு இந்தியாவுக்கு அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான போட்டியில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேற உதவியது.

அவுஸ்திரேலியா மாஸ்டர்ஸ் அணிக்கு எதிரான அரையிறுதிப் போட்டியின் முதல் இன்னிங்ஸில், சச்சின் டெண்டுல்கர், ஸ்டுவர்ட் பின்னி, யூசுப் பதான் போன்றவர்களின் சிறப்பான துடுப்பாட்டத்தின் விளைவாக இந்தியா மாஸ்டர்ஸ் 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட் இழப்புக்கு 220 ஓட்டங்களை பெற்றது.

அம்பதி ராயுடுவின் ஆரம்ப விக்கெட்டை இழந்த போதிலும், சச்சின் டெண்டுல்கர் 30 பந்துகளில் 42 ஓட்டங்களை எடுத்து ஒரு பெரிய இலக்கிற்கு அடித்தளம் அமைத்தார்.

இறுதியில் யுவராஜ் சிங்கின் அதிரடியான 59 ஓட்டங்களும் இலக்கினை நிர்ணயிப்பதற்கு அணிக்கு கைகொடுத்தது.

221 ஓட்டம் என்ற இலக்கினை நோக்கி பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஷேன் வோட்சன் தலைமையிலான அவுஸ்திரேலியா மாஸ்டர்ஸ் அணி, 18.1 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 126 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது. பந்து வீச்சில் ஷாபாஸ் நதீம் 4 விக்கெட்டுகளையும், வினேய் குமார் மற்றும் இர்பான் பதான் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் அதிகபடியாக வீழ்த்தியிருந்தனர். (6-8)

# வீரர்கள் விடுவிக்கப்படும் விதியினை மாற்ற வேண்டும்

## சஞ்சு சம்சன்




“பட்லர் எனது மூத்த சகோதரர் போன்றவர் இவரை விடுவித்தது அனைவருக்கும் ஏமாற்றமாக உள்ளது” என சஞ்சு சம்சன் தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்து அணி முன்னாள் கப்டன் ஜாஸ் பட்லர். ஐ.பி.எல்., தொடரில் 2018 முதல் 2024 வரை ராஜஸ்தான் அணிக்காக விளையாடினார். 83 போட்டியில் 3055 ரன் எடுத்தார். இம்முறை சஞ்சு சம்சன் உட்பட 6 வீரர்களை தக்கவைத்த ராஜஸ்தான் அணி நிர்வாகம், பட்லரை கழற்றி விட்டது. வரும் சீசனில் இவர் குஜராத் அணிக்காக விளையாட உள்ளார்.

எனது மூத்த சகோதரர் போன்றவர் பட்லர். கடந்த ஏழு ஆண்டுகளாக இணைந்து விளையாடினோம். வலிமையான பட்டிங் பார்ட்னர்களாக திகழ்ந்தோம். இப்போதும் ஒருவருக்கு ஒருவர் பேசிக் கொண்டுள்ளோம். இம்முறை பட்லர் அணியில் இல்லாதது மிகவும் சோகமானது.

ஏனெனில் ராஜஸ்தான் கப்டன் பொறுப்பேற்ற போது, அவர் துணைக் கப்டனாக இருந்தார். அணியை சிறப்பாக வழிநடத்த தேவையான ஆலோசனை வழங்கினார். என்னைப் பொறுத்தவரையில் “தக்கவைக்கும் விதி” காரணமாக, வீரர்கள் விடுவிக்கப்படுவதை மாற்ற வேண்டும். இதனால் பல ஆண்டுகளாக கட்டமைக்கப்பட்ட நட்பையும், உறவையும் இழக்க நேரிடுகிறது.

குடும்பத்தில் ஒருவரான பட்லரை தக்கவைக்க முடியாதது, அணி உரிமையாளர்கள், பயிற்சியாளர்கள், சக வீரர்கள் என அனைவருக்கும் ஏமாற்றமளிப்பதாக தெரிவித்தார். (6-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டில்லி கலை இலக்கிய பேரவை,
### யாழ்.இந்தியத் துணைத் தூதகரகம் இணைந்து வழங்கும்
## தமிழ் கலை இலக்கிய மாநாடு

(யாழ்ப்பாணம்)

டில்லி கலை இலக்கியப் பேரவையும் யாழ்.இந்தியத் துணைத் தூதரகமும் இணைந்து நடத்தும் தமிழ் கலை இலக்கிய மாநாடும் இயல்-இசை-நாடகமும் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணி முதல் இரவு 8 மணி வரை யாழ்.திருவள்ளுவர் பண்பாட்டு மையத்தில் இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்வில் முனைவர் பாரதி கிருஷ்ணகுமார், முனைவர் இரா.மாது, டாக்டர் சரண்யா ஜெயக்குமார், Aloha Dr.கே.குமரன், இரா.முகுந்தன், சொல் வேந்தர் பாலமுருகன், சி.பி.கண்ணன், என்.கண்ணன், திருமதி புவனா வெங்கட், தாய்.ராசி.ஜெகதீஸ்வரன், ஆர்.ராமச்சந்திரன் மற்றும் டில்லி கலை இலக்கியப் பேரவையின் பொதுச் செயலாளரும் நிகழ்வு ஒருங்கிணைப்பாளருமான பா.குமார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

பரதநாட்டியம், கவியரங்கம், சிறப்பரங்கம், கருத்தரங்கம், வழக்காடு மன்றம், நூல் வெளியீடு, நாடகம் மற்றும் இசை நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (6-8)

# பூப்பந்தாட்டப் போட்டியில் உடுவில் மகளிர் சம்பியன்



(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கல்வி வலய பாடசாலைகளுக்கு இடையிலான 16 வயதிற்கு உட்பட்ட பெண்களுக்கான பூப்பந்தாட்ட போட்டியில் உடுவில் மகளிர் கல்லூரி அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

வலிகாமம் கல்வி வலய பாடசாலைகளுக்கு இடையிலான பூப்பந்தாட்ட போட்டிகள் மானிப்பாய் இந்துக் கல்லூரி உள்ளக விளையாட்டரங்கில் நடை பெற்றது.

இதில் 16 வயதிற்கு உட்பட்ட பெண்களுக்கான பூப்பந்தாட் போட்டியின் இறுதியாட்டத்தில் உடுவில் மகளிர் கல்லூரி அணியை எதிர்த்து உடுவில் மான்ஸ் வித்தியாலய அணி மோதியது.

இதில் உடுவில் மகளிர் கல்லூரி அணி 2:1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது. (6-8-90)

# பணியாளர்கள் தேவை

கிளிநொச்சியில் அமைந்துள்ள மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லத்தில் பணியாற்றுவதற்கு ஆண்கள் இல்லத்திற்கு முகாமையாளர், ஆண் பணியாளர்கள், தகவல் தொழில்நுட்பம் (கணனி) கற்பிக்கும் ஆசிரியர் தேவையாக உள்ளது.

❖ **முகாமையாளருக்கான தகைமைகள்**

1. வயதெல்லை 25-55 வயதிற்கு உட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.
2. நல்ல உடல் உள ஆரோக்கியம் உள்ளவராகவும் நல்லொழுக்கம் உள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.
3. துறைசார் பணியில் முன் அனுபவம் அல்லது பட்டப்படிப்பினை பூர்த்தி செய்திருத்தல்.
4. Child Care NVQ தொழிற்தகைமை சான்றிதழ் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.
5. தங்கியிருந்து கடமையாற்றுதல் வேண்டும்.

**சம்பள அளவுத்திட்டம்** - (36585+10x660+11x755+15x930 = 65440/=)
தற்போது-36585+6500=43085/= (EPF,ETFபங்களிப்பிற்கு உட்படுத்தப்படும்)

❖ **பராமரிப்பாளர்களுக்கான தகைமைகள்**

1. வயதெல்லை 25-55 வயதிற்கு உட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.
2. நல்ல உடல் உள ஆரோக்கியம் உள்ளவராகவும் நல்லொழுக்கம் உள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.
3. க.பொ.த உயர்தரம் அல்லது அதற்கு மேலான கல்வித்தகைமை
4. Child Care NVQ தொழிற்தகைமை சான்றிதழ் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.
5. தங்கியிருந்து கடமையாற்றுதல் வேண்டும்.

**சம்பள அளவுத்திட்டம்** - (31490+10x445+11x660+10x730 +5x750 = 54250/=)
தற்போது 31490+6500=37990/=(EPF, ETF பங்களிப்பிற்கு உட்படுத்தப்படும்)

❖ **தகவல் தொழில்நுட்ப ஆசிரியருக்கான தகைமைகள்**

1. வயதெல்லை 25-55 வயதிற்கு உட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.
2. நல்ல உடல் உள ஆரோக்கியம் உள்ளவராக இருத்தல் வேண்டும்.
3. தங்கியிருந்து கற்பிக்க விரும்புவோர் அல்லது பகுதி நேர ஆசிரியராக கடமையாற்ற விரும்புவோர் விண்ணப்பிக்கலாம்.
4. கணனி துறையில் டிப்ளோமா அல்லது பட்டப்படிப்பினை பெற்றிருத்தல்.

**குறிப்பு : உணவு, தங்குமிடம் இலவசமாக வழங்கப்படும்.**

குறித்த பணிகளுக்கு விண்ணப்பிக்க தகுதி உடையவர்கள் எதிர்வரும் 23.03.2025 இற்கு முன்னர் தங்களது சுயவிபரத்தினை கீழ் குறிப்பிடப்படும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலமோ அல்லது நேரடியாகவோ சமர்ப்பிக்க முடியும்.

தொடர்பு முகவரி
**ச.மோகனபவன்**
**தலைவர்,**
**மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லம்,**
**ஜெயந்திநகர்,கிளிநொச்சி. 0214923118 /0773240950**

(அ-2459)

# இராசிபலன்

15.03.2025
பங்குனி 01, சனிக்கிழமை
பிரதமை பிற்பகல் 2.27 மணிவரை

உத்தரம் முற்பகல் 8.51 மணிவரை
சுபநேரம் 3.21-4.51மணிவரை
இராகுகாலம் 9.21-10.51 மணிவரை

சந்திராஷ்டமம் - சதயம்

**வளவன்**




நல்லவர்களின் அறிவுரையும் ஆதரவும் கிடைக்கும், குடும்ப மகிழ்ச்சி கூடும், கடன்களை வசூலிக்கும் எண்ணம் உருவாகும், பொது வாழ்வில் கௌரவமான சம்பவங்கள் இடம் பெறலாம்.




வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், பொதுநல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள், நிதி நிலை உயரும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு, உறவினர் வழியில் ஒத்துழைப்புக் கிடைக்கும்.




ஒரு சில வேலைகளுக்காக சற்று அலைய நேரிடலாம், புண்ணிய காரியங்களுக்கு சிறிது செலவு செய்து மகிழ்வீர்கள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.




மருத்துவச் செலவுகள் குறைந்து மன நிம்மதியைக் கொடுக்கும், நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.




பிள்ளைகளின் நீண்டநாளைய கோரிக்கைகளை நிறைவேற்றும் எண்ணம் உருவாகும், பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.




குடும்பத்தில் குதூகலம் கூடும், பேச்சில் இனிமை தென்படும், விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் வாய்ப்புண்டு.




இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், வியக்கும் செய்திகள் வீடு வந்து சேரும், போசன சுகமுண்டு.




பொறுமையால் பெருமை காண வேண்டிய நாள், கடவுளை வழிபட்டு காரியம் சாதிக்க வேண்டிய நாள், வார்த்தைகளில் நிதானம் தேவை, பிரயாண பயமுண்டு.




பொதுக் காரியங்களில் நாட்டம் செல்லும், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகம் அடைவீர்கள், பண வரவு திருப்தி தரும், உற்சாகமான நாள்.




பணத் தேவைகள் எளிதில் கை கூடும், குடும்பத்தினரை அனுசரித்துச் செல்வது நல்லது, வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள், கற்பனை மிகுதியான நாள்.




வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கை கூடும், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவு வார்கள், தூர தேசத்தில் இருந்து நல்ல செய்திகள் வந்து சேரலாம்.




சொந்த பந்தங்கள் வருகையால் சிந்தை மகிழ்வீர்கள், விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்து சேரலாம், சென்ற இடங்களில் செல் வாக்கு மேலோங்கும் நாள், காரிய அனுகூலமுண்டு.

**நம் உடலுக்கு ஒத்துக் கொள்ளாத உணவு நஞ்சுக்கு ஈடானது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைஞனின் கொலைக்கு நீதி கோரி மல்லாவியில் போராட்டம்

(கண்டாவளை)

**முல்லைத்தீவு நட்டாங்கண்டல் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட வவுனிக் குளத்திலிருந்து கடந்த ஆண்டு சடலமாக மீட்கப்பட்ட இளைஞனின் கொலைக்கு நீதி கோரி நேற்றுக் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது**



வெளிநாடு செல்வதற்காக பயண ஏற்பாடுகளைச் செய்த 27 வயதுடைய மல்லாவியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் கடந்த ஆண்டு 29-07-2024 ஆம் திகதி முல்லைத்தீவு நட்டாங்கண்டல் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வவுனிக்குளத்தில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் கொலை செய்யப்பட்டு குளத்துக்குள் போடப்பட்டதாக ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரிய வந்திருக்கின்ற போதும் இதனுடன் தொடர்புபட்ட கொலையாளிகளை இதுவரையும் கைது செய்யவில்லை எனத் தெரிவித்து பிரதேச பொது அமைப்புகள், வர்த்தக சங்கம், பொதுமக்கள் என 300இற்கும் மேற்பட்டோர் திரண்டு குறித்த கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்து இருந்தனர்

மல்லாவி பேருந்து நிலையத்திலிருந்து மல்லாவி பொலிஸ் நிலையம் வரை சென்று பொலிஸ் நிலையம் முன்பாக ஒன்று கூடிய போராட்டக்காரர்கள் பொலிஸாருக்கு எதிராக கோஷங்களையும் எழுப்பியிருந்தனர்

இதனை அடுத்து அங்கு அமைதியின்மை ஏற்பட்டதுடன் சம்பவ இடத்துக்கு மாங்குளம் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் வருகை தந்து போராட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் கலந்துரையாடியதுடன் குறித்த விசாரணைகளைத் தொடர்ந்து முன்னெடுப்பதாகவும் இந்த விசாரணைகளுக்காக விசேட குழு ஒன்றை நியமிக்கப்பட்டு இந்த விசாரணை முன்னெடுக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டதையடுத்து மக்கள் கலைந்து சென்றனர்

இதேவேளை போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தங்களுடைய கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றையும் உதவிப் பொலிஸ் அத்தியட்சகரிடம்கையளித்ததையடுத்து சம்பந்தப்பட்ட பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் கொலை செய்யப்பட்ட இளைஞனின் பெற்றோர், உறவினர்களுடன் கலந்துரையாடலையும் குறித்த பொலிஸ் அத்தியட்சகர் மேற்கொண்டு இருந்தார்.

இதேவேளை குறித்த ஆர்ப்பாட்டத்தைத்தடுக்கும் வகையில் மல்லாவி பொலிஸாரால் நீதிமன்ற தடை உத்தரவு பெறப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (6-8-315)

# வீதி புனரமைப்பிற்கான அங்குரார்ப்பண நிகழ்வு



(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை- பொன்னாலை வீதியில் தொண்டைமானாறு அரசடி முதல் பருத்தித் துறை துறைமுகம் வரையிலான வீதியின் புனரமைப்பு அங்குரார்ப்பண நிகழ்வு வல்வெட்டித்துறைச் சந்தியில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்ட வடக்கு மாகாண ஆளுநர், கடற்கரையோரமாகச் செல்லும் இந்த வீதியின் பாதுகாப்புச் சுவர்கள் கூட கடந்த காலத்தில் விழுந்துள்ளன. மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட இந்த வீதி புனரமைக்கப்படுவது முக்கியமானது.

மாவட்ட அபிவிருத்திக் குழுக்கூட்டத்தில் ஜனாதிபதி வீதிப் புனரமைப்புக்கு நிதி தொடர்பில் கவனம் செலுத்திய நிலையில், அதற்கு அமைவாக அரசாங்கம் வடக்கு மாகாணத்தின் வீதி அபிவிருத்திக்காக இந்த ஆண்டுக்கு மாத்திரம் 5,000 மில்லியன் ரூபாயை ஒதுக்கியிருக்கின்றது. எதிர்காலத்தில் இங்கு பல வீதிகள் அபிவிருத்தி செய்யப்படும் என ஆளுநர் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் கடற்றொழில் அமைச்சர் இ.சந்திரசேகரன், பாராளுமன்ற உறுப்பினர்களான க.இளங்குமரன், ஜெ.ரஜீவன், வடக்கு மாகாண பிரதம செயலர் இ.இளங்கோவன், யாழ். மாவட்டச் செயலர் ம.பிரதீபன், பருத்தித்துறை பிரதேச செயலர் சத்திய சீலன் ஆகியோர் கலந்து கொண்டனர். (6-8)

# வவுனியாவில் கட்டுப்பணம் செலுத்தியது தமிழரசுக்கட்சி

(குருமன்காடு)

வவுனியா மாநகர சபை உட்பட நான்கு உள்ளூராட்சி சபைகளிலும் போட்டியிட இலங்கை தமிழ் அரசு கட்சி நேற்று வவுனியா மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலகத்தில் கட்டுப்பணம் செலுத்தியது.

நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடும் கட்சிகள் எதிர்வரும் 19ஆம் திகதி வரை கட்டுப்பணம் செலுத்த முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கு அமைய வவுனியா மாநகர சபை உள்ளிட்ட நான்கு உள்ளூராட்சி சபைகளிலும் இலங்கை தமிழ் அரசுக் கட்சி வீட்டுச் சின்னத்தில் போட்டியிடவுள்ளது. அதற்கான கட்டுப்பணத்தை பாராளுமன்ற உறுப்பினர் ப.சத்தியலிங்கம் உள்ளடங்கிய கட்சி முக்கியஸ்தர்கள் செலுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (6-8)

# பெண் வைத்தியர் வன்கொடுமை முறையான விசாரணை வேண்டும்

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

சர்வதேச ரீதியாகவும் நாடு முழுவதும் மகளிர் தினம்தொடர்பான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வரும் நாட்களில் ஒரு பெண் வைத்தியர் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்ட செய்தி இலங்கைத் தேசத்திற்கு அவமானத்தைத் தந்துள்ளது என யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

கடந்த 10 ஆம் திகதி திங்கட்கிழமை அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் பெண் வைத்தியர் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வெளியிட்ட அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் காலம் காலமாக இலங்கையில் பல்வேறு சந்தர்ப்பங்களிலும் பெண்கள் வன்கொடுமைக்கு ஆளாக்கப்படும் சூழல் நிலவி வருகின்றது. அரசுக்கு எதிரான நியாயமான புரட்சிகளின்போதும் இன விடுதலைப் போராட்டத்தின் போதும் நூற்றுக்கணக்கான பெண்கள் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்டிருக்கின்றார்கள்.

பாலியல் வன்கொடுமை என்பது இனமுறுகலின் ஆதிக்கத்தை வெளிக்காட்டும் அங்கீகரிக்கப்பட்ட கருவியாகப் பயன்பட்டது. அதனால் ஏராளமான தமிழ்ப் பெண்கள் பாதிக்கப்பட்டார்கள். அவற்றுள் வெளிவந்த கதைகளை விட சமூக கலாசார இரும்புகளைத் தாண்டி வெளிவராத செய்திகள் ஏராளம். இவ்வாறு அநுராதபுரத்தில் பெண் வைத்தியர் ஒருவர் பாலியல் வன்கொடுமைக்கு முகம் கொடுக்க வேண்டியேற்பட்டிருப்பது கவலையளிக்கின்றது.

இச் செயலுடன் தொடர்புடைய சந்தேக நபர் இராணுவத்திலிருந்து தப்பியோடிய ஒருவர் என அறியக்கிடைக்கின்றது. அவரது பின்புலம் இலங்கை இராணுவத்தினர் பெண்களைக் கையாண்ட பல பாதகமான முன்னைய சம்பவங்களையும் தற்போது ஞாபகப்படுத்தி வருகின்றது. போர் நடைபெற்ற போது போரின் ஒரு ஆயுதமாகப் பாலியல் வன்கொடுமை பாவிக்கப்பட்டதுடன் அது தொடர்பில் அலட்சியமும் செய்யப்பட்டது. அந்த அலட்சியம் பெண்களுக்கு எதிரான முறை குறித்து அச்சமற்ற சூழலை சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் விதைத்திருக்கின்றது. இவ் விடயம் தொடர்பாக சர்வதேச மன்னிப்பு சபை மற்றும் சனல்4 உள்ளிட்ட தரப்புக்கள் வலுவாக சுட்டிக்காட்டிய போதும் அது குறித்து கருத்தில் எடுக்கப்படவில்லை. அதன் தொடர்ச்சியாவே அநுராதபுரச் சம்பவம் பார்க்க வேண்டியுள்ளது.

இந்த நாட்டின் தொழிற்படையில் அதிக சதவீதத்தினர் பெண்கள். அவர்கள் தொழில் சார்ந்து உள்ளக குடிப்பெயர்வுக்கு கட்டாயப்படுத்தப்படுகின்ற போது அவர்களது பாதுகாப்புக் குறித்து அதிக கரிசனை கொள்ள வேண்டும்.

சட்டம் மற்றும் நீதித்துறையின் இச் சம்பவம் தொடர்பில் மட்டுமன்றி இது போன்ற முன்னைய சம்பவங்கள் தொடர்பிலும் அதிக கவனம் எடுக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்வதுடன் சட்டங்களை புதிதாக உருவாக்குவதற்கு அப்பால் இருக்கின்ற சட்டங்களை முறையாக அமுல்படுத்துவது குறித்து பலமான அழுத்தங்களை உடனடியாக வழங்க வேண்டும் என அறிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (க-6-8)

# மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் பங்குனித் திங்கள் பொங்கல் உற்சவம்



(யாழ்ப்பாணம்)

வரலாற்று சிறப்பு மிக்க மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகை அம்பாள் ஆலய வருடாந்த பங்குனித் திங்கள் பொங்கல் உற்சவம் நாளை மறுதினம் திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

பங்குனித்திங்கள் நாட்களில் அம்பாளுக்கு விசேட பூசைவழி பாடுகள் அதிகாலை 5 மணிக்கு உஷத்காலப் பூசையுடன் ஆரம்பமாகி காலை, மாலை அபிஷேகம் விஷேட பூசை, பொங்கல், படையல், அர்ச்சனை என்பன வழமை போன்று இடம் பெற்று இரவு 9 மணிக்கு அர்த்தசாமப் பூசையுடன் பங்குனித் திங்கள் பொங்கல்வழிபாடுகள் நிறைவு பெறும்.

பக்தர்கள் வழமை போன்று புனித தீர்த்தக் கேணியில் நீராடி விரதமிருந்து, பொங்கல், படையல், அர்ச்சனை உள்ளிட்ட தமது நேர்த்திகள் வழிபாடுகளை நிறைவேற்றிக் கொள்ள முடியும். இம்முறை 4 பங்குனித் திங்கள் பொங்கல் உற்சவங்கள் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறுதியளித்த விடயங்களை உடன் நிறைவேற்ற வேண்டும்

## தபால் திணைக்கள ஊழியர்கள் போராட்டம்




(கொழும்பு)

அஞ்சல் தொலை தொடர்பு சேவையாளர் சங்கம், அகில இலங்கை தமிழ் பேசும் அஞ்சல் சேவையாளர் சங்கம் என்பன இணைந்து நாடளாவிய ரீதியில் நேற்று போராட்டத்தினை முன்னெடுத்தனர்.

அந்த வகையில் மட்டக்களப்பு தபால் திணைக்களத்திற்கு முன்னால் தபால் திணைக்கள தொழிற் சங்கங்கள் ஒன்றிணைந்து நேற்று மதியம் கவனயீர்ப்பு போராட்டத்தினை முன்னெடுத்தனர்.

கடந்த வருடம் அமைச்சரவையில் தபால் தொழிற்சங்கங்களின் கோரிக்கைகளை நிறைவேற்றி தருவதாக உறுதியளித்த விடயங்களை இது வரை நடைமுறைப்படுத்தாததனை முன்னிட்டு இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அனைத்து தரப்பு வெற்றிடங்களையும் உரிய முறையில் நிரப்ப வேண்டும், அமைச்சர் உறுதி அளித்த விடயங்களை உடன் நிறைவேற்ற வேண்டும், பதவி உயர்வுகளுக்கு காலம் தாழ்த்தாது உடன் வழங்க வேண்டும்.

தபால் திணைக்கள புதிய நியமன முறையை உடன் அமுல்படுத்த வேண்டும் என்கின்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறு, கோஷங்களை எழுப்பியவாறும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நாளை நள்ளிரவு முதல் 18 ஆம் திகதி நள்ளிரவு வரையான காலப் பகுதியில் தொழிற்சங்க நடவடிக்கை போராட்டத்தினை நடைமுறைப்படுத்த இருப்பதாகவும் இப் போராட்டத்தின் போது தெரிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (6-8)



# தரம் 5 புலமைப்பரிசிலின் வெட்டுப்புள்ளிகள் வெளியீடு

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் நடத்தப்பட்ட 2024 ஆம் ஆண்டுக்கான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையின் அடிப்படையில், அடுத்த வருடம் 6ஆம் தரத்துக்கு மாணவர்களை பாடசாலைகளில் இணைத்துக் கொள்வதற்கான வெட்டுப்புள்ளிகள் வெளியிடப்பட்டுள்ளன.

அதன்படி மாணவர்கள் தங்களுக்கு கிடைக்கப்பெற்ற பாடசாலைகளை https://g6application.moe.gov.lk/#/ என்ற இணையதளத்திற்கு பிரவேசித்துப் பார்வையிடலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது

2024 ஆம் ஆண்டு 5 ஆம் தர புலமைப்பரிசில் பெறுபேறுகளின் அடிப்படையில் மாணவர்கள் தகுதி பெற்றிருப்பினும், இந்த வெட்டுப்புள்ளிகளின் அடிப்படையில் பாடசாலைகள் கிடைக்காத மற்றும் பிற நியாயமான காரணங்களுக்காக தங்களுக்கான பாடசாலையை மாற்ற விரும்பும் மாணவர்கள் எதிர்காலத்தில் இணையவழி (Online) ஊடாக மாத்திரம் மேன்முறையீடு செய்ய முடியும் என்றும் மேலும் மேன்முறையீடுகளைச் சமர்ப்பிப்பதற்கான காலக்கெடு பின்னர் அறிவிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது

மேலும் அனைத்து மேன்முறையீடுகளும் இணையவழி ஊடாக மட்டுமே கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சுக்கு அனுப்பப்பட வேண்டுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (6-8)

# யாழ். மாவட்டத்தில் கட்டுப்பணம் செலுத்திய தமிழ் மக்கள் கூட்டணி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலுக்கு தமிழ் மக்கள் கூட்டணியினர் நேற்று மதியம் யாழ்.தேர்தல் அலுவலகத்தில் கட்டுப்பணம் செலத்தியுள்ளனர். இதில் 16 உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தமிழ் மக்களின் கூட்டணியின் சார்பாக வேட்பாளர்கள் போட்டியிடுவதுடன் வல்வெட்டித்துறை நகர சபையின் சுயேட்சையாக களமிறங்கும் வேட்பாளர் ஒருவருக்கு ஆதரவினை வழங்கவுள்ளதாக தமிழ் மக்கள் கூட்டணி உறுப்பினரும் சட்டத்தரணியுமான வேட்பாளர் வி.மணிவண்ணன் தெரிவித்தார். (6-8)


## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு :1991- இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா: 15<br>உயரம்: 5'7'<br>தகைமை/தொழில்: Dip in Telecom& Computer,TO(PVT)<br>எதிர்பார்ப்பு – அரச தொழில்<br>தொ.இ: B/15215 | பிறப்பு : 2000-இந்து<br>நட்சத்திரம் - பூரட்டாதி<br>6இல் சூரிசெவ் கிபா: 27 1/2<br>உயரம் : 5'3"<br>தகைமை/தொழில்: O/L,தையல்<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு<br>தொ.இ: G/15224 |
| பிறப்பு:1983 -இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா: 33 1இல் செவ்<br>உயரம்:5'7"<br>தகைமை/தொழில் - BSc, MSc, London<br>எதிர்பார்ப்பு: UK ONLY<br>தொ.இ: B/15217 | பிறப்பு: 1996-இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>6இல்சூரி செவ்<br>கிபா: 25 உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: BBA,Accountant (pvt)<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்<br>தொ.இ: G/15227 |
| பிறப்பு: 1987- இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: 6 1/4<br>உயரம் :5'6"<br>தகைமை/தொழில்: Computer Network Engineer, Business (own) (Canada)<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/15219 | பிறப்பு: 1996 - இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>3இல் சூரி செவ்<br>கிபா-34 1/2<br>உயரம் :5'7"<br>தகைமை/தொழில்: Nursing Officer(சுவீடன்)<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு<br>தொ.இ: G/15228 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய்

உங்கள் இல்லங்களில் இருந்தவாறே வலம்புரியில் விளம்பரம் செய்யும் வாய்ப்பு

அன்பு வாசகர்களே!

உங்கள் வீட்டில் இடம்பெறும் நிகழ்வுகள் மற்றும் வர்த்தக விளம்பரங்களை எவரது உதவியுமின்றி உங்கள் வலம்புரியில் நேரடியாகப் பிரசுரிக்க முடியும்.

தொடர்புகளுக்கு :

தொலைபேசி:

076 097 3127

021 221 7603

/ -076 636 3378

E-mail: Valampurii@yahoo.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதம்

# இஸ்ரேலுக்கு எதிராக விசாரணை நடத்த தீர்மானம்

● சர்வதேச நீதிமன்றம் ●



(ஜெனிவா)

இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் தரப்பினருக்கு இடையேயான போரில் பாலஸ்தீனர்கள் மீதான இஸ்ரேலின் மனிதாபிமானமற்ற செயற்பாடுகள் குறித்து விசாரணைகள் மேற்கொள்வதற்கு சர்வதேச நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

எதிர்வரும் ஏப்ரல் மாதம் 28 ஆம் திகதி குறித்த விசாரணைகள் ஆரம்பிக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. ஐக்கிய நாடுகள் சபை இவ்விடயம் தொடர்பாக ஆலோசனைகளை கோரும் தீர்மானத்தை அங்கீகரித்ததை தொடர்ந்து இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இதே வேளை, இஸ்ரேலினால் முழுமையாக முற்றுகையிடப்பட்டுள்ள காசாவின் சில பகுதிகளில் உணவு, எரிபொருள் போன்றவற்றுக்கு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (6-8)

# போர் நிறுத்தத்...

# நிபந்தனைகளை ...



(மொஸ்...

30 நா...

அமெரிக்காவி...

கிறோம். ஆ...

னைகளைக் ச...

ஜனாதிபதி வி...

முன்னதாக சவுதி அரேபியாவில் அமெரிக்காவுடன் நடந்த பேச்சுவார்த்தையில் அந்நாடு முன்மொழிந்த 30 நாள் போர் நிறுத்தத்துக்கு உக்ரைன் ஒப்புக்கொண்டது. ரஷ்யாவுடன் உடனடியாக பேச்சு வார்த்தையில் ஈடுபடவும் உக்ரைன் சம்மதம் தெரிவித்திருந்தது. இந்த போர்நிறுத்த ஒப்பந்தம், நிலம், கடல் மற்றும் வான் வழித்தாக்குதல்களை உடனடியாக நிறுத்த வேண்டும் என்று வலியுறுத்துகிறது.


இந்நிலையில் இந்த போர் நிறுத்தத்துக்கு ரஷ்ய ஜனாதிபதி புடின் ஒப்புதல் தெரிவித்துள்ளார். இருப்பினும் அவர் சில நிபந்தனைகளை முன்வைத்துள்ளார்.

போர் நிறுத்த ஒப்பந்தம் தொடர்பாக பெலாரஸ் ஜனாதிபதி அலெக்சாண்டருடன் கூட்டாகச் செய்தியாளர்களை புடின் சந்தித்த பின் ரஷ்ய - உக்ரைன் போர் நிறுத்தத்துக்காக முயற்சிக்கும் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, பிரேசில் ஜனாதிபதி லூலா டி சில்வா ஆகியோருக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அவர்களின் உன்னத இலக்கு வெறுப்பை, உயிரிழப்புகளை முடிவுக்குக் கொண்டு வருவதாக உள்ளது. சவுதி அரேபியாவில் நடந்த பேச்சுவார்த்தையில் அமெரிக்காவின் அழுத்தத்தின் பேரில்தான் உக்ரைன் போர் நிறுத்தத்துக்கு ஒப்புதல் தெரிவித்தது போல் வெளித்

தோ...
ஆல...
ரை...
நிறு...
அமெ...
யுறு...
கள...
அப்...
சூழ்...
யிரு...
போ...
அமெ...
ரை...
அ...
சில...

# தரையிறங்கியவேளை திடீரென தீப்பற்றிய விமானம்



(வோஷிங்டன்)

அமெரிக்காவின் டென்வர் சர்வதேச விமான நிலையத்தில் தரையிறங்கிய விமானத்தில் நேற்று முன்தினம் இன்ஜின் பகுதியில் திடீரென தீப்பிடித்து எரிந்துள்ளது.

முதல்கட்டமாக வெளியான தகவலின்படி, விமானத்தில் பயணித்த 172 பயணிகளும் பத்திரமாக மீட்கப்பட்டதாகவும், யாருக்கும் எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொலராடோ ஸ்பிரிங்ஸ் விமான நிலையத்தில் இருந்து டல்லாஸ் ஃபோர்ட் வொர்த் சர்வதேச விமான நிலையத்திற்கு அமெரிக்கன் ஏயார்லைன்ஸ் (1006) புறப்பட்டு சென்றுள்ளது.

இந்த நிலையில், நடுவானில் இன்ஜின் கோளாறு




ஏற்பட்டதைத் தொடர்ந்து அவசர தரையிறக்கத்துக்கு கட்டுப்பாட்டு அறையினரை தொடர்பு கொண்டு விமானி அனுமதி கேட்டுள்ளார்.

இதையடுத்து கொலராடோ மாகாணத்தில் உள்ள டென்வர் சர்வதேச விமான நிலையத்தில் நேற்று முன் தினம் மாலை 6 மணியளவில் தரையிறக்கப்பட்டுள்ளது.

தரையிறக்கப்பட்ட விமானம், சி38 நிறுத்திமிடத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தபோது இன்ஜின் பகுதியில் திடீரென்று தீப்பிடித்து எரிந்துள்ளது. விமான நிலையம் முழுவதும் புகை மண்டலம் எழுந்த நிலையில் பதற்றம் ஏற்பட்டது.

உடனடியாக விரைந்து செயற்பட்ட விமான ஊழியர்கள் மற்றும் மீட்புப் பணியினர் 172 பயணிகளையும் பத்திரமாக மீட்டதாக அமெரிக்க விமான போக்குவரத்துத்துறை தெரிவித்துள்ளது. மேலும், விமானத்தில் ஏற்பட்ட தீ விபத்துக்கான காரணம் குறித்து விசாரணை நடத்த உத்தரவிடப்பட்டுள்ளது.

ஏற்கனவே கடந்த ஜனவரி மாதம் அமெரிக்காவின் வோஷிங்டன் அருகே ரொனால்ட் ரீகன் விமான நிலையத்தில் தரையிறங்கும்போது விமானமும் இராணுவ ஹெலிகொப்டரும் மோதிய விபத்தில் 67 பேர் பலியாகியிருந்ததமை குறிப்பிடத்தக்கது. (6-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...தத்திற்கு ரெடி; ...ள விதித்த ரஷ்யா

**...மாஸ்கோ)**

**...நாட்கள் போர் நிறுத்தம் என்ற ...க்காவின் பரிந்துரையை நாங்கள் ஏற் ... ஆனால் அதற்கு முன்னர் சில பிரச்சி ...ளைக் களையவேண்டும். என்று ரஷ்ய ...தி விளாடிமிர் புடின் தெரிவித்துள்ளார்.**

தோற்றத்துக்கு புலப்படலாம். ஆனால் உண்மையில், உக்ரைன் தான் போர் நிறுத்தத்தைக் கொண்டுவர அமெரிக்க தரப்பிடம் வலியுறுத்தியிருக்க வேண்டும். கள நிலவரம் அவர்கள் அப்படிக் கோருவதற்கான சூழ்நிலையை உருவாக்கியிருக்கிறது. 30 நாட்கள் போர் நிறுத்தம் என்ற அமெரிக்காவின் பரிந்துரையை ஏற்கிறோம்.

ஆனால் அதற்கு முன்னர் சில பிரச்சினைகளைக் களைய வேண்டும். இது குறித்து அமெரிக்காவும், எங்கள் கூட்டாளிகளுடன் விவாதிக்க வேண்டும்.

விரைவில் இவ் விவகாரம் பற்றி அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப்புடன் ஒரு தொலைபேசி உரையாடலை எதிர்நோக்கியுள்ளேன். இந்தப் போர் நிறுத்தம் என்பது நீண்ட கால அமைதிக்கு வித்திடுவதாக இருக்க வேண்டும்.

உக்ரைன் படைகள் ரஷ்யாவின் குர்ஸ்க் பிராந்தியத்தில் உள்ளன. இந்தப் போர் நிறுத்த ஒப்பந்தம் அமுலாவதற்கு முன்னதாக, அங்கிருக்கும் படையினர் ஆயுதங்களைக் கைவிட்டு சரணடைய வேண்டும். அதேபோல் அமைதி ஒப்பந்தத்தை மீறி தாக்குதல் ஏதும் நடைபெறாமல் இருப்பதற்கான வலுவான கட்டமைப்பு ஏற்படுத்தப்பட வேண்டும். மொத்தத்தில் இந்தப் போர் நிறுத்த ஒப்பந்தமானது பிரச்சினையின் வேரை நாடி சிக்கலைத் தீர்ப்பதாக அமைய வேண்டும். என புடின் தெரிவித்தார். (6-8)

## அணு ஆயுதங்களை நிலைநிறுத்த
## அமெரிக்காவிற்கு போலந்து அழைப்பு



(போலந்து)

ரஷ்யா மற்றும் உக்ரைன் இடையிலான போர் சுமார் 3 வருடங்களாக நீடித்து வரும் நிலையில் தங்கள் நாட்டிற்கும் அணு ஆயுதப் பாதுகாப்பு தேவை என "நேட்டோ" நாடுகளில் ஒன்றான போலந்து வலியுறுத்தியுள்ளது.

உக்ரைன், பெலாரஸ் மற்றும் ரஷ்யாவின் கலினின்கிராட் ஆகியவற்றுடன் போலந்து தனது எல்லையை பகிர்ந்து கொள்கிறது.

இந்நிலையில், ரஷ்யாவின் அச்சுறுத்தல்களை எதிர்கொள்ள தங்கள் நாட்டில் அணு ஆயுதங்களை நிலைநிறுத்த வேண்டும் என அமெரிக்காவுக்கு போலந்து ஜனாதிபதி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் தற்போது பிரான்ஸ் மட்டுமே அணு ஆயுதங்களைக் கொண்டுள்ளது.

சமீபத்தில் பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மேக்ரேன், ரஷ்யாவின் அச்சுறுத்தல்களிலிருந்து ஐரோப்பிய நாடுகளைப் பாதுகாக்க பிரான்ஸ் நாட்டின் அணு ஆயுத சக்தியை பயன்படுத்துவது குறித்து பேச்சுவார்த்தை நடத்தப்பட வேண்டும் என்று கூறியிருந்தார்.

இது தொடர்பாக பிரான்ஸ் அரசிடம் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக கடந்த வாரம் போலந்து பிரதமர் டொனால்ட் டஸ்க் தெரிவித்தார். (6-8)

# ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கு எச்சரிக்கை விடுத்த ட்ரம்ப்



(வோஷிங்டன்)

அமெரிக்காவில் உற்பத்தி செய்யப்படும் விஸ்கி மீது ஐரோப்பிய ஒன்றியம் விதிக்கத் திட்டமிட்டுள்ள வரிகளுக்குப் பதிலடி கொடுக்கும் விதமாக, பிரான்ஸ் மற்றும் பிற ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் மதுபானப் பொருட்களுக்கு 200% வரி விதிக்கப் போவதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள பதிவில் அமெரிக்கா மீதான வரியை ஐரோப்பிய ஒன்றியம் உடனடியாக நீக்காவிட்டால், பிரான்ஸ் மற்றும் பிற ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதித்துவ நாடுகளிலிருந்து வரும் அனைத்து வைன்கள், ஷாம்பெயின்கள் மற்றும் மதுபானப் பொருட்களுக்கும் அமெரிக்கா விரைவில் 200% வரி விதிக்கும் என ட்ரம்ப் குறிப்பிட்டுள்ளார்.

முன்னதாக கனடாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு 25 சதவீத வரி விதிப்பை அமுல்படுத்தப் போவதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அறிவித்த நிலையில் அமெரிக்காவினால் முன்வைக்கப்பட்டுள்ள இந்த அழுத்தத்திற்கு ஒருபோதும் கனடா அடிபணியப் போவதில்லை என கனடாவின் புதிய பிரதமர் மார்க் கார்னி தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (6-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெட்டுக் காயங்களுடன் இரு சடலங்கள் மீட்பு

(திருமலை)

திருகோணமலை மூதூர் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தாஹா நகர் பகுதியில் இருவர் வெட்டுக் காயங்களுடன் சடலமாக மீட்கப் பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித் துள்ளனர்

இச்சம்பவம் நேற்று அதிகாலை 4.30 மணியளவில் இடம்பெற் றுள்ளதுடன் மூதூர் தாஹா நகர் பகுதியில் சிறிதரன் தர்ஷினி என்பவருடைய வீட்டிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் குறித்து தெரியவருவ தாவது-கணவர் வெளிநாட்டில் வசித்து வருபவர் எனவும் சிறிதரன் ராஜேஸ்வரி (68வயது) மற்றும் அவரது பெரியம்மாவான சக்திவேல் ராஜகுமாரி (74 வயது) ஆகிய இருவர் வெட்டு காயங்களுடன் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன் உயிரிழந்த சிறிதரன் ராஜேஸ்வரி என்பவரின் 15 வயது மகள் வெட்டு காயங்களுடன் மூதூர் தள வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவந் துள்ளது.

குறித்த கொலை சம்பவத்தில் எவரும் இதுவரை கைது செய் யப்படவில்லை எனவும் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் மூதூர் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (6-8)

# வன விலங்குகள் பற்றிய
## தேசிய கணக்கெடுப்பு இன்று

(கொழும்பு)

விவசாயப் பயிர்களுக்கு சேதம் விளைவிக்கும் வன விலங்குகள் பற்றிய தேசிய கணக்கெடுப்பு இன்று காலை 8 மணியளவில் முன் னெடுக்கப்படவுள்ளது.

வீட்டுத்தோட்டம், விவசாய நிலம், பாடசாலை, வழிபாட்டுத் தலம் அல்லது நிறுவனம் ஆகியவற்றில் இருக்கும் குரங்குகள், அணில்கள் மற்றும் மயில்களின் எண்ணிக் கையை கணக்கிட்டு வழங்கப்பட்ட கணக் கெடுப்பு படிவத்தில் பதிவு செய்து பிரதேச கிராம அலுவலர் அல்லது பொரு ளாதார மேம்பாட்டு அலுவலர் அல்லது சமுர்த்தி மேம்பாட்டு அலு வலர் அல்லது விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளரிடம் கையளிக் குமாறு விவசாய, கால்நடை வளர்ப்பு, நிலம் மற்றும் நீர்ப் பாசன அமைச்சு அறிவித்துள்ளது. (6-8)



# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 120 | 100 | 130-150 |
| உருளைக்கிழங்கு | 180 | 180 | 180 | 170 |
| பச்சைமிளகாய் | 800 | 700 | 500 | 450-500 |
| தக்காளி | 180 | 180 | 100 | 100-120 |
| மரவள்ளிக்கிழங்கு | 280 | 280 | 200 | 150-200 |
| கோவா | 300 | 250 | 400 | 240 |
| கரட் | 850 | 700-850 | 1000 | 750 |
| பூசணி | 120 | 140 | 150 | 80-100 |
| புடோல் | 150 | 150 | 150 | 150 |
| வாழைக்காய் | 160 | 100 | 120 | 80-100 |
| சின்ன வெங்காயம் | 250 | 150-250 | 300 | 50-200 |
| பெரிய வெங்காயம் | 180 | 180 | 180 | 150 |
| பாகற்காய் | 450 | 400 | 500 | 450-700 |
| வெண்டக்காய் | 300 | 250 | 200 | 250-300 |
| கருணைக் கிழங்கு | 180 | 260 | 150 | 150 |
| பயற்றங்காய் | 400 | 250 | 300 | 300-400 |
| லீக்ஸ் | 400 | 350 | 300 | 250 |
| பீற்றூட் | 180 | 160 | 150 | 100-120 |
| கறிமிளகாய் | 800 | 450 | 400 | 400-500 |
| முருங்கைக்காய் | -- | 2500 | 1500 | 2500 |
| போஞ்சி | 450 | 400 | 300 | 350 |
| கத்தரிதம்புள்ள | 100 | 80 | 150 | 100 |
| கீரை – 1 பிடி | 100 | 100 | 150 | 60-70 |
| தேசிக்காய் | 250 | 250 | 100 | 150 |
| தேங்காய் (ஒன்று) | 220 | 220-300 | 200 | 150-250 |
| இராசவள்ளி | 600 | 450 | 500 | 400 |
| வெங்காயப்பூ | 200 | 250 | 150 | 60-150 |
| முள்ளங்கி | 100 | 150 | 150 | 120 |
| பொன்னாங்காணி | 120 | 80 | 100 | 100 |
| வல்லாரை | 60 | 60 | 80 | 50 |
| ஈரப்பலா | 100 | 100 | 50 | 100 |

# இன்று ஒரு தகவல் 340



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## உண்மை எது? பொய் எது?

ஒரு ஊரில் ஒரு ராஜா இருந்தார். அவர் அடிக்கடி காட்டுக்கு வேட்டையாடப் போவார். சில நண்பர்களையும் கூட அழைத்துக் கொண்டு போவார். ஆளுக்கு ஒரு பக்கமாகப் போய் வேட்டையாடுவார்கள். மாலையில் திரும்பி வருவார்கள். மறுநாள் அரண்மனையிலே உட்கார்ந்து ஒவ்வொருத்தர் அனுபவங்களையும் சொல்லுவார்கள். அவரவர் வீரத்திற்கு தகுந்த பரிசை ராஜா கொடுப்பார்.

இதுமாதிரி ஒரு தடவை எல்லோரும் வேட்டைக்குப் போய்விட்டு திரும்பி வந்ததும் உட்கார்ந்து பேச ஆரம்பித்தார்கள். ஒருவன் தன்னுடைய வீரதீரச் செயலைப் பற்றி அளக்க ஆரம்பித்தான்.

அரசே! நேற்று காட்டிலே என்ன ஆகியது தெரியுமா? எனக்கு நேராக ஒரு சிங்கம் வாயைத் திறந்து வந்தது! நான் பயப்படவில்லை! உடனே ஒரு கல்லை எடுத்து குறிபார்த்து வீசினேன். சிங்கத்தின் வாயிலே போய் கல் மாட்டியது அவ்வளவுதான் அந்த சிங்கம் என்னைப் பார்த்து ஒரே ஓட்டமாக ஓடிப்போய்விட்டது. ஆகா பலே! எல்லோரும் கைதட்டினார்கள். இரண்டாவது ஆள் ஆரம்பித்தான். அரசே நான் போன வழியிலே இரண்டு பெரிய மலைப்பாம்பு கிடந்தது. என்னை முழுங்குவதற்கு வந்தது. நான் என்ன செய்தேன் தெரியுமா? அந்த இரண்டு பாம்புகளின் வால்களையும் ஒன்றாக சேர்த்து முடிச்சு போட்டு விட்டேன்! அவ்வளவுதான். அது அங்கே இழுக்க இது இங்கே இழுக்க முடிச்சு நன்றாக இறுகிப் போய்விட்டது அப்படி என்றார்.

அற்புதம் என்று சொல்லி எல்லோரும் கைதட்டினார்கள். அடுத்தபடியாக மூன்றாவது ஆள் சொல்ல ஆரம்பித்தான். அரசே! நான் போன பாதையிலே குறுக்கே ஒரு ஆறு! அதில் இறங்கி குளித்தேன். யாரோ காலைப் பிடித்து இழுப்பது போல இருந்தது. திரும்பிப் பார்த்தால் ஒரு பெரிய முதலை! நான் உடனே ஜம்ப் பண்ணி முதுகிலே போய் உட்கார்ந்துவிட்டேன். கரைக்கு நீந்தி வந்தேன். கரை வந்ததும் குதித்து விட்டேன் என்றார். அட எப்பேற்பட்ட வீரம் என்று எல்லோரும் கைதட்டினார்கள்! நான்காவது ஆள் எழுந்தான்.

மன்னா நான் போன இடத்திலே ஒரு கரடி என்னைத் துரத்த ஆரம்பித்தது. நான் ஒரு மலை உச்சிக்கு வந்துவிட்டேன். அதற்குப்பிறகு ஒரு அடி எடுத்து வைத்தால் அதலபாதாளத்திலே விழ வேண்டியதுதான். அந்த நேரம் பார்த்து ஒரு பெரிய ராட்சசக் கழுகு அந்தப் பக்கமாக பறந்து வந்தது! உடனே நான் உயரே எழும்பி அதன் காலைப் பிடித்துக்கொண்டேன். தொங்கிக் கொண்டே வந்தேன். ஒரு நல்ல இடம் வந்ததும் தொப்பென்று குதித்து நடந்து வந்துவிட்டேன். இதற்கு எல்லோரும் கை தட்டினார்கள். கடைசியாக ஒரு ஆள் எழுந்தான். அரசே நான் போன வழியிலே ஒரு பெரிய யானை குறுக்கே வந்துவிட்டது. பயங்கரமான சத்தம் போட்டுக்கொண்டே வந்தது. நான் பயந்து ஓடவில்லை. நான் என்ன செய்தேன் தெரியுமா? அதன் வாலைப் பிடித்து தூக்கி கர கர என்று பிடித்து சுற்றிவிட்டு வேகமாக வீசி எறிந்தேன். அவ்வளவுதான். அந்த ஸ்பீட்லே யானை மேலே போக ஆரம்பித்தது தான் இன்னும் கூட போய்க்கொண்டே இருக்கிறது. இதைக் கேட்டதும் ராஜாவக்கு கோவம் வந்தது. என்னை என்ன முட்டாள் என்று நினைத்து பேசுகிறாயா? யானையை நீ வாலைப் பிடித்து தூக்கினியா. அதை நான் நம்ப வேண்டுமா? என்றார். உடனே இவர் பணிவாக பதில் சொன்னான்.

அரசே ஒரு சிங்கத்தின் வாயிலே கல் மாட்டியதையும், மாலைப்பாம்பு வாலைப் பிடித்து முடித்து போட்டதையும், முதலை முதுகிலே சவாரி செய்ததையும், கழுகு காலைப் பிடித்து பறந்ததையும் நம்பும்போது நான் சொல்வதை நம்பக்கூடாதா?

பொய் சொன்னவர்கள் எல்லாம் தலையை தொங்கப் போட்டுக் கொண்டார்கள்.

ராஜா அவர்களைப் பார்த்து சொன்னார். நீங்கள் எல்லோருமே என்னை முட்டாளாக்கியிருக்கிறீர்கள். கடைசியாகப் பேசிய இவனால் தான் எனக்கு உண்மை எது பொய் எது என்பது புரிந்தது. இவன் தான் உண்மையான தைரியசாலி! என்று சொல்லி அவனுக்கே பரிசையும் கொடுத்தார். பாராட்டினார். உண்மையை நிலை நாட்டுகிறவர்தான் உண்மையான வீரன் என்பதை இதிலிருந்து நாம் புரிந்து கொள்ளவேண்டும். இந்தக் காலத்திலே எல்லாம் பொய் சொன்னால்தான் பிழைக்க முடியும் என்பது சிலபேருடைய நம்பிக்கை!

ஒரு அப்பாவுக்கு தன் மகனுக்குப் பொய் சொல்லத் தெரியவில்லையே என்கிற கவலை. பொய் சொன்னால்தான் இந்த உலகத்திலே பிழைக்கலாம். ஆனால் இவனுக்கு அது தெரியவில்லை. அதனாலே இவனை அழைத்து கொண்டுபோய் நடுக்கடலிலே விட்டு விட்டு வந்துவிடலாம் என்று அழைத் துக்கொண்டு புறப்பட்டான். கடற்கரைக்குப் போனார். மகனுக்கு சந்தேகம் எங்கே அப்பா என்னைக் அழைத்துக்கொண்டு போகிறீர்கள் என்று கேட் டான். கடலிலே மீன் பிடிக்க கற்றுக் கொடுக்கப் போகிறேன் உனக்கு என்றார். நான் ஏற்கனவே மீன் பிடித்து விட்டேன் என்றான் மகன். எங்கே அது என்று கேட்டார் அப்பா. சுட்டுச் சாப்பிட்டு விட்டேன் என்றான் பிள்ளை. அப்பா பார்த்தார் சரி நம் பிள்ளை பிழைக்கும் என்று சொல்லி திருப்பி அழைத்துக் கொண்டு வந்துவிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரம்பமான கச்சதீவு திருவிழா




(கச்சதீவு)

கச்சதீவு அந்தோனியார் ஆலய நற்கருணை திரு விழா நேற்று மாலை 4.15 மணியளவில் கொடியேற் றத்துடன் ஆரம்பமானது.

இதன்போது இலங்கை யிலிருந்தும் இந்தியாவிலி ருந்தும் பல யாத்திரிகர்கள் கலந்து கொண்டனர். குறித்த திருவிழா இன்று சனிக் கிழமை வரை இடம்பெற வுள்ளது. (6-8)

# கடலட்டை தொழிலை முன்னெடுப்பவர்கள் எதிர்கொள்ளும் இடர்பாடுகள் ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் நேற்று கட லட்டை தொழிலை முன்னெ டுப்பவர்கள் எதிர்கொள்ளும் இடர்பாடுகள் தொடர்பில் ஆரா யும் கலந்துரையாடல் நடை பெற்றது.

"ஏழை மீனவர் ஒருவர் கடலட்டை பண்ணை ஆரம் பிப்பதற்கு விண்ணப்பித்தால் அதற்கு இழுத்தடிப்புச் செய் யப்படுகின்றது. இதுவே வசதி படைத்த ஒருவர் விண் ணப்பித்தால் உடனடியாக அனு மதி வழங்கப்படுகின்றது. ஏன் ஏழை மீனவர்களை இவ்வாறு அலைக்கழிக்கின்றீர்கள்? ஏழைகளுக்கு ஒரு நடை முறை, வசதிபடைத்தோருக்கு இன்னொரு நடைமுறையா?" என ஆளுநர் கூட்டத்தின் ஆரம்பத்தில் திணைக்களத் தலைவர்களை நோக்கி கேள்வி எழுப்பினார்.

தற்போது வடக்கில் அமைக் கப்பட்டுள்ள கடலட்டை பண் ணைகளுக்கு 6 மில்லியன் அட்டைக்குஞ்சுகள் தேவை யாகவுள்ள நிலையில், நெக்டா நிறுவனத்தால் ஒரு மில்லியன் குஞ்சுகளே உற்பத்தி செய்யக் கூடிய இயலுமை உள்ளமை யால், கடலட்டை பண்ணை களுக்கான புதிய அனுமதிகள் வழங்கப்படுவது தற்போது நிறுத்தி வைக்கப்பட்டுள்ள தாகவும் ஆளுநருக்குத் தெரி யப்படுத்தப்பட்டது.

இதேவேளை, கடலட்டை பண்ணைக்கான அனுமதியு டன் தொடர்புடைய திணைக் களங்களுக்கு இடையிலான தொடர்பாடலின்மையால் முத லீட்டாளர்கள் பாதிக்கப்ப டுகின்றனர் எனக் குறிப்பிட்ட ஆளுநர், அதைச் சீர்செய்யு மாறும் பணிப்புரை விடுத் தார்.

அதேபோன்று திணைக் களங்கள் அனுமதி வழங்கல் மற்றும் அனுமதி புதிப்பித்தல் போன்ற நடவடிக்கைகளை எவ்வாறு ஒருங்கிணைந்து செயற்படவேண்டும் என்பன தொடர்பான அறிவுறுத்தல்க ளும் வழங்கப்பட்டன.

இந்தக் கலந்துரையாடலில் வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர், வடக்கு மாகாண காணி ஆணையாளர், ஆளுந ரின் உதவிச் செயலாளர், பிர தேச செயலர்கள், யாழ். மாநகர சபை ஆணையாளர், பிரதேச சபைச் செயலர்கள், நெக்டா நிறுவன உதவிப் பணிப்பாளர், கடற்றொழில் நீரியல்வளங்கள் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர், கரையோர பாது காப்புத் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர், நகர அபிவிருத்தி அதிகார சபையி னர், மத்திய சுற்றாடல் அதிகார சபையினர் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர். (6-8)






# கிளிநொச்சியில் 37 குடும்பங்களே மீள்குடியமர்த்தப்பட வேண்டியுள்ளது

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் 97.02 வீதமான கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுள்ளதுடன் 37 குடும்பங்களே இன்னும் மீள் குடி யேற்ற வேண்டிய தேவையுள்ளது என கிளிநொச்சி மாவட்ட பதில் அரச அதிபர் எஸ்.முரளிரதன் தெரிவித் துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் கண்ணிவெடியகற்றல் செயற்பா டுகள் தொடர்பாக நேற்று ஊடகங் களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே குறித்த விடயத்தை தெரிவித்தார்.

மாவட்டத்தில் 97.2 வீதமான நிலப்பரப்பில் இதுவரை கண்ணி வெடிகள் அகற்றப்பட்டுள்ளது 2.7வீத மான நிலப்பரப்பிலே கண்ணி வெடிகள் அகற்ற வேண்டிய தேவை யுள்ளது.

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலா ளர் பிரிவின் முகமாலை கிராம அலுவலர் பிரிவிலேயே குறித்த 2.7வீதமான பகுதிகள் அகற்றப்படா மையுள்ளது.

இதனால் 37குடும்பங்களை மீளக்குடியமர்த்த முடியாத நிலை காணப்படுவதாகவும் கண்ணிவெடி யகற்றும் நிறுவனங்களுடன் நடை பெற்ற இரண்டு கலந்துரையாலைத் தொடர்ந்து இந்த வருடம் எட்டாம் மாதத்தில் கண்ணிவெடியகற்றிய பிரதேசங்களை கையளிக்க முடியும் என தெரிவித்திருக்கிறார்கள்.

எனவே விரைவாக குறித்த 37 குடும்பங்களையும் மீளக்குடிய மர்த்த முடியும் என இதன்போது தெரிவித்தார். (6-8-316)

# மன்னாரில் கட்டுப்பணம் செலுத்திய ஜே.வி.பி

(மன்னார்)

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் மன்னார் மாவட்டத்தில் போட்டியிட தேசிய மக்கள் சக்தி கடந்த புதன்கிழமை மதியம் மன் னார் மாவட்ட தேர்தல் அலு வலகத்தில் கட்டுப்பணத்தை செலுத் தியுள்ளது.

இளைஞர் மற்றும் விளையாட்டு விவகார அமைச்சின் மன்னார் மாவட்ட அமைப்பாளர் முஹமட் சாஜித் தலைமையில் கட்டுப் பணத்தை செலுத்தியுள்ளனர்.


மன்னார் மாவட்டத்தில் மன்னார் நகர சபை, நானாட்டான் பிரதேச சபை, முசலி பிரதேச சபை, மாந்தை மேற்கு பிரதேச சபை ஆகிய நான்கு உள்ளூராட்சி மன்றங்களுக்கான கட்டுப் பணத்தை செலுத்தியுள்ள னர். (6-8-285)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்கியின் பொன்னியின் செல்வன் பாகம் - 3

காவியத் தொடர் 725





திலும் மனச்சாந்தி இல்லை, மறு ஜென்மத் திலும் அவருக்கு நிம்மதி இருக்க முடியாது!"

"அக்கா! சமீபத்தில் நான் இரண்டு மூன்று தடவை மர ணத்தின் வாசல் வரையில் சென்று திரும்பினேன். அப் போதெல்லாம் என் மனத் தில் தோன்றிய எண்ணம் என்ன தெரியுமா? பெரியம் மாவைத் தந்தையிடம் அழைத் துப் போய் விடாமல் செத் துப் போகிறோமே என்ற ஏக்கந்தான். அக்கா! அந்த மாதரசியை நினைத்தாலும் என் உள்ளம் குமுறுகிறது. வாயிருந்தால் மனதிலுள்ள குறைகளையும் வேதனைக ளையும் வெளியிட்டுச் சொல்லி ஆறுதல் அடையலாம்.

காது இருந்தால் பிறர் கூறும் ஆறுதல் மொழிகளை கேட் டுத் துக்கம் தீரலாம். வாயும் செவியும் இல்லாத ஒருத்தியி னுடைய நிலையை எண்ணிப் பார்! உள்ளத்தில் குமுறும் அன்பையும், ஆர்வத்தையும், துன்பத்தையும், வேதனை யையும், கோபத்தையும், தாபத் தையும் எல்லாவற்றையும் மனத்திற்குள்ளே அடக்கி வைத்திருக்கவேண்டும். அதி லும் நம் பெரியன்னையைப் போல் ஆசாபங்கம் அடைந் தவளின் மனோ நிலையைப் பற்றிச் சொல்ல வேண்டுமா? அவள் பைத்தியக்காரியைப் போல் இலங்கைத் தீவின் காடுகளில் சுற்றித் திரிந்து கொண்டிருப்பதில் வியப் பென்ன? அதையெல்லாம் நினைக்க நினைக்க, என் நெஞ்சு வெடித்துவிடும் போலி ருக்கிறது.

அவளை எப்படியாவது அழைத்து வந்து தந்தையி டம் சேர்ப்பிக்க வேண்டும் என்ற ஆர்வம் உண்டாகிறது. ஆனால் நம் தந்தை அதை விரும்புவார் என்று நினைக் கிறாயா, அக்கா?"

"தந்தை விரும்பினாலும் சரி, விரும்பாவிட்டாலும் சரி, நம்முடைய கடமை அது, தம்பி! இறந்து போனவளின் ஆவி வந்து அவரைத் துன் புறுத்துவதாக எண்ணி இரவு நேரங்களில் நம் தந்தை அல றுகிறார். இதனாலேயே அவர் உடம்பும் குணமடைவ தில்லை." "இது எப்படி உனக்குத் தெரிந்தது, அக்கா! இதுவும் தந்தை சொன்னாரா?" "தந்தையும் சொன்னார் என் தோழி வானதியும் சொன் னாள்."

"வானதி சொன்னாளா? அவளுக்கும், இதற்கும் என்ன சம்பந்தம் அக்கா! நீ அவ ளிடம் சொன்னாயா, என்ன?"

"இல்லை, இல்லை! தஞ்சை அரண்மனையில் ஒருநாள் நிகழ்ந்ததை அவள் வாய் மொழியாகவே சொல் லச் சொல்கிறேன். இருந்தா லும், நீ ரொம்பப் பொல்லா தவன், தம்பி! சோழர்குலத் தின் பண்பாட்டையே மறந்து விட்டாய்! கொடும்பாளூர் இளவரசியிடம் ஒரு வார்த்தை பேசவும் இல்லை! சௌக்கியமாக இருக்கி றாயா என்று கேட்கக்கூட இல்லையே? மகாவீரரான சிறிய வேளாரின் புதல்விக்கு நீ செய்யும் மரியாதை இது தானா? அழகாயிருக்கி றது!"

(தொடரும்...)

## சிறுவர் அரங்கம்



### ஆறுவது சினம்

(நேற்றையதொடர்ச்சி...)

நாட்டில் தண்ணீர் பஞ்சத்தை எப்படிப் போக்குவது என்று தவி யாய் தவித்தார். அப் போது மன்னரைச் சந் தித்த தளபதியார் "அரசே ! நாம் நாட்டில் மேற்குக் கரையோர நிலப் பரப்பில் அதிகமாக நீர் ஊற்று காணப்படுகி றது. அந்த நிலப்பரப் பில் பெரியகுளம் ஒன் றினை வெட்டினால் நாட்டில் தண்ணீர் பஞ் சத்தை தீர்த்து விட லாம்" என்றார்.



தளபதியாரின் யோசனை மன்னருக்கு புத்துணர்ச்சியை அளித் தது. உடனே குளத்தை வெட்டுவதற்கு ஏற்பாடு செய்தார்.

தளபதியார் கூறி யபடியே குளம் நிரம்ப தண்ணீர் பெருகியது. அங்கிருந்து பல கிரா மங்களுக்குத் தண்ணீரை எடுத்துச் செல்ல ஏற் பாடு செய்தார் மன்னர்.

அடுத்தநாள் அரசவை கூடியதும் மன்னர் தள பதியாரை அழைத்தார். "தளபதியாரே! நல்ல ஆலோசனை வழங்கும் நீர் தளபதியாக இருப்ப தில் எனக்கு விருப்ப மில்லை. அதனால் உம்மை என்னுடைய முக்கிய மந்திரியாக நியமிக் கிறேன்" என்றார்.

அதனைக் கேட்ட தள பதியார் "அரசே ! மன் னிக்க வேண்டும். நான் கூறிய ஆலோசனைகள் எல்லாம் என் மூளையில் உதித்தவைகள் அல்ல. அவை எல்லாம் இன் னொருவரின் மூளையில் உதித்தவை" என்று அடக் கத்துடன் கூறினார்.

அதனைக் கேட்ட மன்னர் ஆச்சரியத்துடன் தளபதியாரை நோக்கி னார். "தளபதியாரே ! இந்த ஆலோசனைகளுக் கெல்லாம் சொந்தக்கா ரரை நான் உடனேயே பார்க்க வேண்டும். அவ ரையே எனது முக்கிய மந்திரியாக நியமிக்க விரும்புகிறேன்" என்று கூறினார்.

உடனே தளபதியார் "அரசே ! அவர்தான் தங் களிடம் முன்பு மந்திரி யாக வேலை செய்தவர்" என்று கூறினார்.

அதனைக்கேட்ட மன் னர் திகைப்படைந்தார். "தளபதியாரே நீர் என்ன சொல்கிறீர்? மந்திரி யார் இன்னும் உயிரோ டுதான் இருக்கின்றாரா" என்று ஆச்சரியமாகக் கேட்டார்.

உடனே தளபதியும் அரசே ! தாங்கள் ஆத் திரப்பட்டபடி நானும் ஆத்திரப்பட்டு கோபத் தில் மந்திரியாரின் தலையை வெட்டி எறி ந்து இருந்தால் இன்று நம் நாடு தண்ணீர்ப் பஞ்சத்தில் சிக்கியிருக் கும்.

அதே நேரம் பக்கத் துநாட்டு மன்னனுக்கு அடிமையாகி நீங்க ளும் கைதாகி சிறை யில் இருக்கின்ற சூழ் நிலை அமைந்திருக் கும். அதனால்தான், மந்திரியாரை கொல் லாமல் அவரை மறை வாக வைத்திருந்தேன்" என்று கூறினார்.

அதனைக் கேட்ட மன்னர் மந்திரியாரை அழைத்து வரும்படி கூறி, மந்திரியார் வந்த தும் அவரிடம் மன்னிப் புக்கேட்டு மீண்டும் தனது முக்கிய மந்திரி யாக வைத்துக் கொண் டார்.

தனது ஆத்திரத்தை யும் கோபத்தையும் அன் றோடு விட்டொழித் தார். கோபத்தை கட் டுப்படுத்தியபடி வாழ வேண்டும்.

அப்போது தான் மேல் நிலையை அடைய முடியும். (முற்றும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைதியின் உண்மைச் சொரூபம் மனதில் இருந்து வெளிப்படும்போது அன்பின் உணர்வும் தானே வெளிப்படும். ~ யாரோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## இனப் பிரச்சினைக்கான தீர்வு எப்போது பேசப்படும்! யார் பேசுவது!

வரவு செலவுத் திட்ட விவாதங்கள் ஓய்ந்துள்ளன. பெரும்பான்மை பலத்துடன் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் இருப்பதன் காரணமாக வரவு செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக வாக்களியுங்கள் என எந்தப் பாராளுமன்ற உறுப்பினரிடமும் கேட்க வேண்டிய தேவை இருக்கவில்லை.

வரவு செலவுத் திட்டம் குறித்து எதிர்த்தரப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர்; சில விடயங்களைப் பிரஸ்தாபித்திருந்தாலும் வழமை போல கன்சாட் பதிவோடு குறித்த பிரஸ்தாபிப்புகள் ஸ்தம்பித்துப் போகும்.

இதுவே வழமை. அந்த வழமைக்கு அநுர அரசும் விதிவிலக்கல்ல என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது.

இதற்கும் மேலாக, வரவு செலவுத் திட்டத்தில் குற்றம் காண வேண்டும் என்பதற்காக மொத்த தேசிய செலவை ஒரு குறிப்பிட்ட பிரிவுக்கான செலவோடு ஒப்பிடுகின்ற பொருத்தமற்ற விடயங்கள் குறித்தும் விவாதிக்கப்பட்டமை இங்கு கவனிக்கத்தக்கது.

நிலைமை இதுவாக இருக்கும்போது, இப்போது இலங்கைப் பாராளுமன்றத்தில் பட்டலந்த வதை முகாம் விவகாரம் பேசுபடு பொருளாகியுள்ளது.

ஆம், சந்திரிகா குமாரதுங்க ஜனாதிபதியாக இருந்தபோது நியமிக்கப்பட்ட பட்டலந்த விசாரணை ஆணைக்குழு, விரிவான அறிக்கை ஒன்றை முன்வைத்திருந்தது.

எனினும் அரசியல் செல்வாக்குகள் காரணமாக குறித்த அறிக்கை தொடர்பில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இந்நிலையில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை அண்மையில் அல் - ஜசீரா சர்வதேச தொலைக்காட்சி செவ்வி கண்டபோது, பட்டலந்த வதை முகாம் குறித்து ரணில் விக்கிரமசிங்கவிடம் பிரஸ்தாபிக்கப்பட்டது.

குறித்த ஊடகம் பட்டலந்த வதைமுகாம் குறித்தும் பட்டலந்த விசாரணை ஆணைக் குழுவின் அறிக்கை தொடர்பிலும் ரணில் விக்கிரமசிங்கவிடம் கேட்ட கேள்விகள் குறித்த விவகாரத்தை சபைக்குக் கொண்டு வந்துவிட்டது.

தவிர, சம்பந்தப்பட்ட விவகாரம் ஜே.வி.பிக்கு இழைக்கப்பட்ட அநீதி என்பதாலும் இப்போது ஆட்சியில் இருப்பது ஜே.வி.பி என்பதாலும் பட்டலந்த வதை முகாம் பற்றிய விவகாரம் பாராளுமன்றத்தில் சூடுபிடிக்கும் என்பதில் ஐயமில்லை.

இவ்வாறு இலங்கைப் பாராளுமன்றத்தில் பட்டலந்த வதை முகாம் குறித்தும் விசாரணை ஆணைக்குழு வெளியிட்ட அறிக்கை தொடர்பிலும் பாராளுமன்றத்தில் பிரஸ்தாபிக்கப்படும்போது, அது கணிசமான நாட்களைத் தன்னுள் அடக்கிக் கொள்ளும்.

பரவாயில்லை. ஒரு வதை முகாம் பற்றிய விடயங்கள் பேசப்பட வேண்டும்.

அதேநேரம் பேச வேண்டிய எங்கள் இனப் பிரச்சினை குறித்தும் இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்தும் பாராளுமன்றத்தில் எப்போது பேசப்படும். அதை யார் பேசுவது என்ற கேள்விகள் நம்மைக் குடைந்து கொண்டே இருக்கின்றன.

# வடக்கில் 16 ஆயிரம் ஏக்கரில் தென்னை முக்கோண வலயம்

## இலவசமாக தென்னங்கன்றுகள், உரம் வழங்க நடவடிக்கை

*(கொழும்பு)*

வடக்கு மாகாணத்தில் 16 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் தெங்கு முக்கோண வலயம் அமைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்கு 5500 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இலவசமாக தென்னங்கன்றுகள் மற்றும் உரம் வழங்குவதற்காக 819 இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதோடு நீர் விநியோகத்திற்கும் நிலப்பரப்புக்கு அமைய நிவாரணம் வழங்கப்படுமென பெருந்தோட்டத்துறை மற்றும் சமூக உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சர் சமந்த வித்யாரத்ன தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை (14) நடைபெற்ற 2025 ஆம் ஆண்டுக்கான வரவு, செலவுத் திட்டத்தின் பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சு மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றியதாவது,

தேங்காய் விநியோகத்தில் தட்டுப்பாடு காணப்படுகிறது என்பதை ஏற்றுக்கொள்கிறோம். ஒரு காலத்தில் இலங்கையில் இருந்து தேங்காய் ஏற்றுமதி செய்யப்பட்டது. ஆனால் தற்போது இறக்குமதி செய்யப்படுகிறது. அரசுக்கு சொந்தமான தென்னந் தோட்டங்களுக்கு கடந்த 5 ஆண்டுகாலமாக உரம் வழங்கப்படவில்லை, தோட்டங்கள் முறையாக பராமரிக்கப்படவில்லை என்று எதிர்க்கட்சியினரும் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

தெங்கு பயிர்ச்செய்கை தொடர்பில் 10 ஆண்டுகால தேசிய கொள்கைத் திட்டத்தை தயாரிப்பதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம். வருடாந்தம் 3000 மில்லியன் தேங்காய்களுக்கான கேள்வி காணப்படுகின்ற நிலையில் கடந்த ஆண்டு 2,754 மில்லியன் தேங்காய்கள் மாத்திரமே உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

இந்த ஆண்டு 2,900 மில்லியன் தேங்காய்களை உற்பத்தி செய்யவும், 2030ஆம் ஆண்டளவில் 4,200 மில்லியன் தேங்காய்களை உற்பத்தி செய்ய எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

ரஷ்யா அரசாங்கம் இலங்கைக்கு இலவசமாக எம்.ஒ.பி வகையான உரத்தை வழங்கியுள்ளது. இந்த உரம் தெங்குப் பயிர்ச்செய்கைக்கு முழுமையாக வழங்கப்படும். 4,000 ரூபாய் என்ற நிவாரண விலைக்கு வழங்கப்படும். இதற்கமைய இந்த ஆண்டு 5,700 மில்லியன் ரூபா அளவில் தெங்குப் பயிர்ச்செய்கையாளருக்கு நிவாரணம் வழங்கப்படும்.

30 ஆண்டுகால யுத்தத்தை எதிர்கொண்டு வடக்கு மாகாணத்துக்கு இதுவரை காலமும் குறைந்தளவான அபிவிருத்திகளே வழங்கப்பட்டன. வடக்கு மாகாணத்தில் 16 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் தெங்கு முக்கோண வலயத்தை அமைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்கு 500 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. தென்னங்கன்றுகள் இலவசமாக வழங்கப்படும். 10 இலட்சத்து 24 ஆயிரம் தென்னங்கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

வடக்கு மாகாண மக்களுக்கு தெங்குப் பயிர்ச்செய்கைக்கு இலவசமாக உரம் வழங்கப்படும். இதற்கு மாத்திரம் 819 இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. அத்துடன் நீர்விநியோகத்திற்கும் ஏக்கர் நிலப்பரப்புக்கு அமைய நிவாரணம் வழங்கப்படும் என்றார்.

(ம-7)

## பட்ஜெட் பற்றாக்குறையை நிவர்த்திசெய்ய ஐ.எம்.எப் நிதி பயன்படுத்தப்படாது

### பிரதி அமைச்சர் ஹர்ஷண சூரியபெரும

2025 ஆம் ஆண்டுக்கான வரவு, செலவுத் திட்டத்தின் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கு நாணய நிதியத்திடமிருந்து பெற்றுக்கொள்ளப்படவுள்ள அடுத்த தவணைக் கடன் பயன்படுத்தப்படாது. நாணய நிதியத்தின் செயற்திட்டங்கள் சிறந்த முறையில் அமுல்படுத்தப்படுமென நிதி மற்றும் பொருளாதாரத் திட்டமிடல் பிரதி அமைச்சர் ஹர்ஷண சூரியபெரும தெரிவித்தார்.

2024.01.01 ஆம் திகதி முதல் 2024.09.21 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து இலங்கை 336 மில்லியன் டொலர் கடன் தொகையைப் பெற்றுக்கொண்டுள்ளது. அத்துடன் 2024.09.21 ஆம் திகதி முதல் இன்றளவில் நாணய நிதியத்திடமிருந்து 334 மில்லியன் டொலர்கள் கடன் தொகை பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

2024.09.21 ஆம் திகதி முதல் இன்றளவில் நாணய நிதியத்திடமிருந்து ஒரு தவணை அடிப்படையில்" கடன் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

வரவு, செலவுத் திட்டத்தின் பற்றாக்குறையை முகாமைத்துவம் செய்வதற்கு இந்தக் கடன் தொகை பயன்படுத்தப்பட்டது என்றார்.

(ம-7)

## யூரியூப்பரின் பிணை மறுப்பு தொடர்ந்து விளக்கமறியல்

இளம் பெண்ணொருவரிடம் அத்துமீறி பேசியதற்காக கைது செய்யப்பட்ட யூரியூப்பரிற்குப் பிணை வழங்க நீதிமன்றம் மறுத்துள்ளது.

மல்லாகம் நீதிமன்றத்தினால் குறித்த உத்தரவானது நேற்று (14) பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நகர்த்தல் பத்திரம் மூலம் யூரியூப்பரின் வழக்கு, மல்லாகம் நீதிமன்றத்தில் பிணைக்கு அனுமதி கோரி விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

இதன்போது, சமூக மட்டத்தில் இவரது செயற்பாடுகள் சர்ச்சைக்குரிய நிலையிலும் பலக் குற்றச்சாட்டுகளுடன் இருப்பதாலும் பிணை மறுக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், யூரியூப்பர் தொடர்பான வழக்கு விசாரணை எதிர்வரும் 19 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (ம-7)

## கடற்றொழில் அமைச்சருடன் இளைஞர்கள் வாக்குவாதம்

யாழ்ப்பாணத்தில் கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகருடன் இளைஞர்கள் வாக்குவாதத்தில் ஈடுபட்டமையால் அப்பகுதியில் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

பருத்தித்துறை - பொன்னாலை வீதி புனரமைப்பு பணிகளுக்காக கடந்த அரசாங்கம் நிதி ஒதுக்கியிருந்து, நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக பணிகள் இடை நிறுத்தப்பட்டிருந்தது. அந்நிலையில் தற்போது மீள அப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதனை தேசிய மக்கள் சக்தியினர் தாம் புதிதாக புனரமைப்பு பணிகளை முன்னெடுப்பதாக காட்டுகின்றனர் என கூறியே அப்பகுதி இளைஞர்கள் கடற்றொழில் அமைச்சருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

பொன்னாலை - பருத்தித்துறை கரையோரப் பிரதான வீதி புனரமைக்கும் பணியினை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு நேற்று முன் தினம் வியாழக் கிழமை இடம்பெற்றது.

வல்வெட்டித்துறை பகுதியில் நடைபெற்ற நிகழ்வில் கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரம் கலந்து கொண்டு ஆரம்பித்து வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவள்ளுவர் குருபூசை தினம் நேற்று அனுஷ்டிப்பு





(வவுனியா)

திருவள்ளுவர் குரு பூசை தினமான நேற்று வவுனியா வைத்தியசாலை சுற்றுவட்ட வீதியில் அமைந்துள்ள திரு வள்ளுவர் சிலையடியில் இடம் பெற்றது.

இதன்போது திருவள்ளு வரின் சிலைக்கு மாலை அணி விக்கப்பட்டதுடன் மலர்தூவி மரியாதை செலுத்தப்பட்டு திரு வள்ளுவர் தொடர்பான நினைவு பேருரை பாடசாலை மாணவர்களால் நிகழ்த்தப் பட்டது. வவுனியா நகரசபை யின் ஏற்பாட்டில் நகரசபை செயலாளர் பாலகிருபன் தலை மையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவர் சந்திர குமார், முன்னாள் நகரசபை உறுப்பினர் சுமந்திரன், முன் னாள் கிராம உத்தியோகத்தர் விஜயகுமார், வெளிச்சம் அறக் கட்டளை தலைவர் லம்போத ரன், நகர சபை ஊழியர்கள், மகளிர் அமைப்பினர், சமூக ஆர்வலர்கள் எனப் பலரும் கல ந்து கொண்டனர்.

அதேவேளை கோப்பாய் ஆசிரியர் கலாசாலையிலும் திருவள்ளுவர் குருபூசை அனு ஷ்டிக்கப்பட்டது. (6-8)


# அநுராதபுரம் போதனாவிற்கு பதில் பணிப்பாளர் நியமனம்

(அநுராதபுரம்)

உடனடியாக அமுலுக்கு வரும் வகையில், அநுராத புரம் போதனா வைத்திய சாலையின் பதில் பணிப்பாளர் பதவிக்கு பதிலாக பொல ன்னறுவை வைத்தியசாலை யின் பணிப்பாளர் டாக்டர் எச்.எம்.யு.ஜ கருணாரத்ன நியமிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுக் காலை சுகாதார அமைச்சின் செயலாளர் டாக்டர் அனில் ஜாசிங்கவினால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள் ளது. (6-8)



சென்பற்றிக்ஸ் கல்லூரியின் 175 ஆவது ஆண்டு நிறைவு விழாவினை முன்னிட்டு நேற்று கல்லூரியின் வளர்ச்சியை பறை சாற்றும் வகையில் கல்லூரி மாணவர்கள் மற்றும் பழைய மாணவர்களுடன் இணைந்து நடைபவனி இடம்பெற்றது.

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3314


### செர்வின்

பிள்ளைங்க அமைதியா இருக்காங்கன்னா



அங்க சத்தமே இல்லாம
பெரிய சேட்டை நடக்குதுன்னு அர்த்தம்

### யதுஷன்




### சாருஜா

அருள் இல்லார்க்கு அவ்வுலகம் இல்லை



போன் இல்லாதவர்களுக்கு
இவ்வுலகமே இல்லை

### மிதுன்

மனைவி: எதையும் எடுத்த இடத்தில
வைக்கத் தெரியாதா உனக்கு...



கணவன்: நீ கூட தான் என் பாக்கெட்ல
பணம் எடுக்குற மறுபடியும்
அங்கேயா வைக்குற...

### அக்ஷயா

கல்யாணம் பண்ண பிறகு
மனைவியுடன் ப்ரிட்ஜ் மாதிரி
வாழலாம்னு நினைச்சா



வாழ்க்கை, அது வாஷிங் மிஷின்
மாதிரி புரட்டி எடுக்குது...

### சாமினி

ஏன்னே அவன அடிக்கிறீங்க..??
வெயிலா இருக்கு ஜூஸ் குடிக்கலாம்
வாடான்னு சொன்னா..




வேணாம் "சூரிய வெளிச்சத்துல தான்
'வைட்டமின் டி' சத்து அதிகமா இருக்கு...
வாங்க டீ குடிக்கலாம்னு சொல்றாம்பா
இவன்

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 16 கிலோ...

யில் 16 கிலோகிராம் கஞ்சாவுடன் இரண்டு சந்தேக நபர்கள் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேற்படி சந்தேக நபர்கள் வாகனமொன்றில் கஞ்சாவைக் கடத்திச் சென்றவேளை, விசேட அதிரடிப் படையினர் அவர்களைக்கைது செய்து சாவகச்சேரிப் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

சாவகச்சேரி மற்றும் மட்டக்களப்புப் பகுதிகளைச் சேர்ந்த இரு சந்தேக நபர்கள் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். (ம-7,30)

## முல்லை - பரந்...

இதில் நாவாந்துறையைச் சேர்ந்த மதுசன் குணசிங்கம் (வயது-28) என்ற இளைஞனே உயிரிழந்தவராவார்.

முல்லைத்தீவு - பரந்தன் வீதியில் இரண்டு தினங்களுக்கு முன்னர் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் விபத்துக்குள்ளானதில் குறித்த இளைஞன் படுகாயமடைந்திருந்தார்.

படுகாயமடைந்த இளைஞன் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப் பட்டபோது சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். (ம-7,33)

## விசேட அறிக்கை...

பாராளுமன்றில் நேற்று வெள்ளிக்கிழமை அமைச்சர் பிமல் ரத்நாயக்கவினால் பட்டலந்த ஆணைக்குழு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

எனவே, இந்த பட்டலந்த ஆணைக் குழு அறிக்கை தொடர்பான சில விடயங்களை முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வெளியிடவுள்ளதாக அவரது அலுவலகம் தெரிவித்துள்ளது. (ம-7)

## காலியில்...

துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த நபர் பலபிட்டிய வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

உயிரிழந்தவர் அம்பலாங்கொடை, இடம்தோட்டைப் பகுதியைச் சேர்ந்த 45 வயதுடையவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## மட்டக்களப்பில்...

இதில் கொக்குவில் கே.கே.எஸ் வீதியைச் சேர்ந்த ஜீவரட்சகன் மதுகிசன் (வயது-29) என்ற இளைஞனே உயிரிழந்தவராவார்.

மட்டக்களப்பு - திருகோணமலை வீதியில், வீதியைக் கடக்க முற்பட்ட வேளை வான் ஒன்று மோதியதிலேயே குறித்த இளைஞன் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவத்தில் வான் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதோடு மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

## இரு தமிழ்ப்...

திருகோணமலை மூதூர் - தாஹா நகர்ப் பகுதியில் உள்ள வீடொன்றில் இருந்து நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை சகோதரிகளான பெண்கள் இருவர் வெட்டுக் காயங்களுடன் சடலமாக மீட்கப்பட்டிருந்தனர்.

இந்தச் சம்பவத்தில் 68 மற்றும் 74 வயதுடைய இரு பெண்களே கொலை செய்யப்பட்டுள்ளனர்.

மூதூர் தாஹா நகர்ப் பகுதியைச் சேர்ந்த குடும்பநல மருத்துவ மாதுவாகக் கடமையாற்றிவரும் பெண்ணின் வீட்டிலேயே கொலை இடம்பெற்றுள்ளது.

இந்தப் பெண் மூதூர் வைத்திய சாலையில் வியாழக்கிழமை இரவு கடமைக்காகச் சென்றிருந்த நிலையில் அந்த வீட்டில் 15 வயதான அவரது மகள், பெண்ணின் தாய், பெரியம்மா உறவுடைய மற்றுமொரு பெண் என மூன்று பேர் மாத்திரம் இருந்துள்ளனர்.

இந்நிலையில் அதிகாலை வேளை இந்தக் கொலை இடம்பெற்றுள்ளதாகவும் கொலைச் சம்பவத்தின்போது கூரிய ஆயுதங்களைக் கொண்டு தாக்கியதில் இருவருடைய கழுத்துப் பகுதிகளில் வெட்டுக் காயங்கள் ஏற்பட்டு இருவரும் உயிரிழந்த நிலையில் 15 வயதான மகள் சிறு காயங்களுடன் மூதூர் தள வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார்.

இதன்போது இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பில் 15 வயது சிறுமியிடம் பொலிஸார் மேற்கொண்ட நீண்டநேர விசாரணையின் பின்னர், அந்தச் சிறுமி [illegible] செய்ததாக ஒப்புக்கொண்டுள்ளார்.

அம்மம்மா தன்னை எப்போதும் திட்டுவதாகவும் தன் மீது அவருக்கு பாசம் இல்லை என்றும் மன அழுத்தம் காரணமாக இருவரையும் கொலை செய்துவிட்டதாகவும் பொலிஸாரிடம் அந்தச் சிறுமி வாக்குமூலம் அளித்துள்ளார்.

அதன் பின்னர், அந்தச் சிறுமி பொலிஸாரால் கைது செய்யப்பட்டு மூதூர் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட பின்னர் திருகோணமலைக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளார். (ம-7)

*(முன்னர் கிடைத்த செய்தி உள்ளே)*

## பட்டலந்த அறி...

ஒரு வாழும் சாட்சி என சபை முதல்வர் பிமல் ரத்நாயக்க பாராளுமன்றத்தில் நேற்று உணர்வுபூர்வமாக உரையாற்றினார்.

பட்டலந்த ஆணைக்குழுவின் அறிக்கையைச் சபை முதல்வர், அமைச்சர் பிமல் ரத்நாயக்க நேற்றுப் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பித்தார்.

ஜனாதிபதி தலைமையில் அமைச்சரவையினால் இந்தப் பட்டலந்த அறிக்கை தொடர்பான செயற்பாடுகளை மேற்கொள்வதற்குக் கொள்கைத் தீர்மானம் ஒன்று கொண்டு வரப்பட்டதாகவும் அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

சம்பந்தப்பட்ட அறிக்கை தொடர்பாக இரண்டு நாட்கள் விவாதிக்கப்படவுள்ளதாகச் சபை முதல்வர் மேலும் சுட்டிக்காட்டினார்.

ஆணைக்குழுவின் அறிக்கையை முன்வைத்த சபை முதல்வர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்,

தலைமுறையின் மனசாட்சியைக் கட்டுப்படுத்தும் இந்த அறிக்கையை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிப்பதற்கும் மக்கள் மயப்படுத்துவதற்கும் எனக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

போராட்டங்களை நடத்திய தலைமுறையின் கண்ணீர், அவர்கள் அனுபவித்த வேதனைகள் மற்றும் சோதனைகள் அவற்றுக்கு அர்த்தம் தெரிவிப்பதற்கு 208 பக்கங்களுடன் காணப்படும் இந்த அறிக்கைக்கு முடியாது என்பதை நாம் அறிவோம்.

இந்த அறிக்கை கொலை செய்யப்பட்ட இளைஞர்கள் மற்றும் அவர்களின் பாசமிக்கவர்களுடைய வேதனைகள் மற்றும் பெருமூச்சுக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அறிக்கையாக அதனைத் தயாரிப்பதற்கு ஒத்துழைப்பு வழங்கிய அவர்களுக்கு என்னுடைய நன்றிகள்.

ஜனாதிபதி செயலகத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த இந்த அறிக்கை 35 வருடங்களுக்குப் பிறகு பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவதாகச் சபை முதல்வர் குறிப்பிட்டார்.

தமது அரசியல் நோக்கங்களுக்காக நாடொன்று பல யுகங்களாக முற்றிலும் அழித்துச் செல்லப்பட்டுள்ளது.

எவ்வாறு எனில், ஜனநாயகத்திற்குக் கிடைத்த மக்கள் வரத்தை தமது நண்பர்களுக்காகப் பலிகடாவாக்க முடியுமா என்பது தொடர்பாக இந்த அறிக்கை ஒரு வாழும் சாட்சியாகும் என்றும் அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார். (ம-7)

மஹஜன சம்பத
திகதி 2025.03.14
சீட்டிழுப்பு இலக்கம் 5775
R 7 0 4 5 7 9
அத சம்பத
R 4 5 7 9
சீட்டிழுப்பு இலக்கம் 0350
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2025.03.14
சீட்டிழுப்பு இலக்கம் - 1805
J 14 44 58 62 J
Double Chance 48135

மெகா பவர்
திகதி 14/03/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2123
C 23 24 27 59 73

ஜய JAYA
திகதி 2025.03.14
சீட்டிழுப்பு இலக்கம் 043
Z 7 2 6 6

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4017
சீட்டிழுப்பு திகதி 14.03.2025
T 01 05 08 32
T

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.03.14
சீட்டிழுப்பு இலக்கம் 1084
விருச்சிகம் 27 48 54 58 விருச்சிகம்
61459 07

உத்தியோகபூர்வ முடிவுகள்
14.03.2025 வெற்றி வாரம் 483
M 2 0 3 8 8 2
ரூ.33,492,749.60
51184
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2749
சீட்டிழுப்பு திகதி 2025.03.14 தினம் வெள்ளிக்கிழமை
24 46 58 74 N
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 92,157,470.40
DLB

சனிதா
திகதி 14.03.2025 வெற்றி வாரம் 4910
05 58 64 78 G
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 56,828,189.20
ரூ.100,000/- 87796
DLB

சசிரி
வெற்றி வாரம் 642
14.03.2025 வெள்ளிக்கிழமை
21 22 49
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.200,000.00
DLB

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4461
சீட்டிழுப்பு திகதி 14.03.2025 தினம் வெள்ளிக்கிழமை
05 17 43 62
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,956,583.20
201065
DLB

S 14 15 21 30 39
1925
14.03.2025
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.568,446,810.40
DLB

வெள்ளிக்கிழமை
வெற்றி வாரம் : 2575
சீட்டிழுப்பு திகதி : 2025.03.14
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.79,647,586.40
ADA KOTIPATHI
20 54 60 62 F
772998
DLB

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று 15.03.2025 சனிக்கிழமை

யாழ். திருவள்ளுவர் பண்பாட்டு அரங்கில்

## பரத நாட்டிய அரங்கேற்றம் காணும்



திரு திருமதி
உதயகுமார் வத்சலா
தம்பதியரின்
செல்வப் புதல்வி
அகரயாழினி அவர்களின்
அரங்கப் பிரவேசம்
சிறப்புற வாழ்த்துகின்றோம்.



**அகரயாழினியின் நடன அரங்கேற்ற வாழ்த்துப்பா!**

அகரத்தையும் யாழையும் இணைத்து
அகரயாழினி எனும் தமிழ்ப்பெயர் தாங்கி
தமிழ்மொழி மீதான அளவிலா பற்றையும்
தமிழர் கலைகள் மீதான பிணைப்பையும்
உணர்வாக உயிர்மூச்சாக உள்ளத்துள் விதைத்து,
கணமும் அயராத உழைப்பின் அறுவடைநாளிது!
தடைகள் பல தாண்டி விடாமுயற்சியுடன்
கற்ற கலை அரங்கேறும் இந்நன்நாளிலே
வெற்றிமேல் வெற்றிவர சிறப்பாரங்கள் பெருகிவர,
பெற்றோரின் அன்புடனும் உற்றாரின் ஆசியுடனும்
நேரிய தமிழ்மொழி நெறியுற வகுத்த
சீரிய ஆடற்கலையில் மேலும் சிறப்புறும்
அரங்கேற்ற வேளையிது தாவட்டும் பாதம்
திக்கெட்டும் பேசட்டும் நீயாடும் பரதம்!

வாழ்த்துபவர்
**அன்புத் தோழி**
**செல்வி நவீனா உதயகுமாரன்**
**(டென்மார்க்)**

(3653)

---

## மணிவிழா வாழ்த்து



## திருமதி ஜெயகௌரி பஞ்சரத்தினம் B.A

(பயிற்றப்பட்ட தமிழ் பாட ஆசிரியர்)

**சேவை விபரம்**

- யா/ அச்சுவேலி சரஸ்வதி வித்தியாலயம் 28.03.1990 - 08.01.1993
- புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தா கல்லூரி 09.01.1993 - 02.01.1994
- புத்தகலட்டி ஸ்ரீவிஷ்ணு வித்தியாலயம் 03.07.1994 - 05.05.1996
- யா/ஆவரங்கால் நடராஜா வித்தியாலயம் 06.05.1996 - 17.06.1998
- தோப்பு அருள் நந்திவித்தியாலயம் 18.06.1998 - 02.01.2020
- அச்சுவேலி மத்தியகல்லூரி 03.01.2020 - 14.03.2025

எமது பாடசாலையின் ஆசிரியராக பணியாற்றி 14.03.2025 அன்று ஓய்வுபெற்ற திருமதி **ஜெயகௌரி பஞ்சரத்தினம்** அவர்களுக்கு இனிய மணிவிழா வாழ்த்துக்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஓய்வுக்காலம் சிறப்பாக அமையவும் பிரார்த்திக்கின்றோம்.


(3646)

**வாழ்த்துவோர்** பாடசாலை சமூகம்
யா/ அச்சுவேலி மத்திய கல்லூரி, அச்சுவேலி.

---

## விவசாயிகளுக்கு


இந்தியாவில் இருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட Greaves MK12, MK 20 நீர் இறைக்கும் இயந்திரம் (Water Pump) இப்பொழுது எம்மிடம். அத்துடன் இலங்கையில் முதன் முதலாக அறிமுகப்படுத்துகின்றோம். ஒரே என்ஜினிற்கு விரும்பிய எரிபொருளை நீங்களே தெரிவு செய்யலாம். (மண்ணெண்ணெய், பெற்றோல், டீசல்)



" நாங்கள் உங்களோடு"

**ஆர்க் . என் . கம்பனி**

150, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 222 4021
A9 வீதி, எழுதுமட்டுவாழ். 070 191 3571
A9 வீதி, பரந்தன் சந்தி, பரந்தன். 021 228 2020



Hotline : 071 535 7799/ 071 535 7803

(3664)

---

## உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்

**V2 TRAVELS**

எமது கிளைகள்
- கிளிநொச்சி
- கன்னாகம்
- சாவகச்சேரி
- மானிப்பாய்
- நெல்லியடி
- பருத்தித்துறை
- திருகோணமலை
- வல்வெட்டித்துறை
- கோப்பாய்
- புத்தூர்
- பண்டத்தரிப்பு
- சங்கானை
- கொழும்பு

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com

(C-262)

---

**வலம்புரி** விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378 | 076 097 3127

---

## பணியாளர் தேவை

நெல்லியடியில் இயங்கும் சைவ உணவகத்திற்கு பின்வரும் பணியாளர்கள் தேவை.

- உணவு பரிமாறுபவர் (வெயிற்றர்)
- பார்சல் கட்டுபவர்
- மரக்கறி வெட்டுபவர்
- ரொட்டி வேலை

தங்குமிடம், உணவு வழங்கப்படும், சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கலாம்

தொடர்பு : 077 362 0979

(C-2460)

---

## வாடகைக்கு வீடு தேவை

நாவற்குழியில் இருந்து கொடிகாமம் வரை எங்கள் Sun Marketing (PVT)Ltd க்காக வாடகைக்கு வீடு தேவை.

இருப்பிடம் : கைதடி
தேவையான வசதிகள் : வீட்டுடன் கூடிய வளவு
வாடகை வரம்பு : பேசித் தீர்மானிக்கப்படும்

விருப்பமுள்ளவர்கள் உடனே தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு : 077 876 1657

(925)

---

புளியம்பொக்கணை நாகதம்பிரான்
ஆலய பரிபாலன சபை

## கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயம்
## பங்குனி உத்தரப்பொங்கல் – 2025
## வியாபார நிலையங்களை ஏலம் வழங்கல்

கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்தின் வருடாந்த பங்குனி உத்தரப் பொங்கல் எதிர்வரும் 11.04.2025 ஆம் திகதி சிறப்பாக நடைபெறவுள்ளது. பொங்கல் உற்சவத்தின் போது வாணிபங்கள் மேற்கொள்ள விரும்பும் வர்த்தகர்களுக்கான வர்த்தக நிலையங்களை ஏலத்தில் வழங்குதல் எதிர்வரும் 23.03.2025 ஆம் திகதி மு.ப 10.00 மணிக்கு ஆலய முன்றலில் இடம்பெறும். உற்சவ கால வியாபாரத்திற்காக கடைகளை ஏலத்தில் பெற விரும்புகின்றவர்கள் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

குறிப்பு:
1. ஏலத்தின் போது முழுத்தொகையும் செலுத்தப்படல் வேண்டும்.
2. பொலித்தீன் பாவனை தடைசெய்யப்பட்டுள்ளது.

ஆலய பரிபாலன சபை,
கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயம்.

(C-2461)

---

## Happy Supermarket - உரும்பிராய்

| | | |
|---|---|---|
| 1Kg வெள்ளைச் சீனி | - 220/= | |
| 1Kg சிவப்பு பருப்பு | - 268/= | |
| 1Kg மஞ்சள் பருப்பு | - 412/= | |
| 1Kg Prima கோதுமை மா | - 158/= | |
| 1Kg றவை | - 285/= | |
| 1Kg பொன்னி | - 243/= | |
| 1Kg தீட்டல் பச்சை | - 250/= | |
| 1Kg கடலை | - 420/= | |
| 1Kg வெள்ளை உளுந்து | - 780/= | |
| 1Kg வெள்ளைப்பச்சை(உள்நாடு) | - 220/= | |
| 10Kg விஜிதா நாடு | - 2850/= | ~~3000/=~~ |
| 1Kg ஈக்குத்தீட்டல் | - 220/= | |
| 1Kg சோயா | - 380/= | |
| 01 ஓசன் மீன்ரின் | - 380/= | ~~560/=~~ |
| 01 டசின் தீப்பெட்டி | - 170/= | ~~240/=~~ |

Max 01



400g Anchor 1000/= ~~1050/=~~



அங்கர் யோகட் 50/= ~~80/=~~

தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு Facebook:- happy basket.lk இனை நாடவும்

பலாலி வீதி,
உரும்பிராய் சந்தி.

Happy Supermarket
0777 8080 30

(927)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.03.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.